
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ ThinakaranLk / ThinakaranLK
2023 செப்டெம்பர் 19 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 222 | Tuesday 19, September, 2023 | 12 பக்கங்கள் | 50/-




## நிர்வாண புகைப்படங்கள், வீடியோக்கள்;
# சமூக வலைதளங்களில் பரப்பினால் கடும் தண்டனை
### விரைவில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு



சமூக வலைதளங்களில் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பரப்புபவர்களுக்கு தண்டனை வழங்க விரைவில் புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்த சட்டங்கள் அடங்கிய சட்டமூலம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம்

04

# நிர்மாணத்துறையை மீண்டும் கட்டியெழுப்ப 13 முக்கிய யோசனைகள்
### அமைச்சின் செயலாளர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் நிர்மாணத் துறையில் நிலவும் பின்னடைவை நிவர்த்திசெய்யும் வகையில் 13 யோசனைகளை உள்ளடக்கிய கடிதம் நிர்மாணத் துறை மற்றும் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சின் செயலாளர்

04

# ஐ.நா.பொதுச்சபையின் கூட்டத் தொடர் நேற்று ஆரம்பம்
### 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விசேட உரை

லோரன்ஸ் செல்வநாயகம்



ஐக்கிய நாடுகள் சபையின் 78வது கூட்டத்தொடர் நேற்று அமெரிக்காவின் நியூ யோர்க் நகரில் ஆரம்பமாகியுள்ளதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21 ஆம் திகதி விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

04

# பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை முற்றாக ஒழிக்க தேசியக்குழு நியமனம்!
## ராகிங் கொடுமை இடம்பெறுமானால் உடனடியாக பொலிஸுக்கு தகவல் தெரிவிக்க தொலைபேசி இலக்கங்கள்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டின் பல்கலைக்கழகக் கட்டமைப்பிலிருந்து பகிடிவதையை இல்லாதொழிப்பதற்காக பகிடிவதை எதிர்ப்பு தேசியக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

மேற்படி தேசியக் குழுவில் ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ்மா அதிபர், மனித உரிமை ஆணைக் குழு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உபவேந்தர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளடங்குவதாகவும் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பகிடிவதை சம்பவங்கள் இடம்பெறுமானால், அதுதொடர்பில் 1977, 0112123700 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது 076 5453454 என்ற வட்ஸ் அப் இலக்கத்திற்கோ உடனடியாக தொடர்பு கொண்டு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

24 மணித்தியாலமும் செயலில் உள்ள மேற்படி தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளும் போது, உடனடியாக அந்தச் சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே கலாநிதி சுரேன் ராகவன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கடந்த 12 மாதங்களில் 36 பகிடிவதை சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் பகிடிவதை

04

## நாட்டிலுள்ள நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள்;
# தொழில்நுட்ப தகவல்கள் பெற்று புனர் நிர்மாண பணிகள் விரைவில்



### இரு வாரங்களுள் அறிக்கை சமர்ப்பிக்க சாகல பணிப்பு

நாட்டில் உள்ள அனைத்து நீர்த் தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து பெறப்பட்ட தொழில்நுட்ப தகவல்களின் அடிப்படையில், அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாணப் பணிகள் மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படும் செலவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை,

04



03

### கஜேந்திரன் MP மீது தாக்குதல் நடத்தியோரை கைது செய்க
உடன் கைதுக்கு சுமந்திரன் MP வலியுறுத்து


# GCE A/L பரீட்சையை ஒத்திவைக்க தீர்மானம்
### வஜிர MP தனது முகநூலில் அறிவிப்பு



எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருந்த 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒத்திவைக்கும் தீர்மானம் ஏற்கனவே கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தனது முகப் புத்தகத்தில் தெரிவித்துள்ளார். 'ஜி77 மற்றும் சீன அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக கியூபாவிற்கு

04

# எரிபொருள், சுகாதாரம், மின்சாரம் உள்ளிட்ட முக்கியமான சில துறைகள் அத்தியாவசிய சேவைகளாகின




சில அத்தியாவசிய சேவைகளைப் பெயரிட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இதன் படி, மின்சாரம் தொடர்பான அனைத்து சேவைகளும், கனிய எண்ணெய் உற்பத்தி மற்றும் எரிபொருள் வழங்கல் அல்லது விநியோகம், மருத்துவமனைகள் உள்ளிட்ட சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பெயரிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் செயலாளர் சாந்தனி விஜயவர்தனவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. மக்களின் இயல்பு

04

# நாட்டில் டெங்கு நோய் தீவிரம்; செப்டெம்பரில் 1,500 பேர் தாக்கத்திற்குள்ளாகினர்



நாட்டில் டெங்கு நோய் தீவிரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. செப்டெம்பர் 18ஆம் திகதிவரை நாட்டில் 1,583 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதன்படி, 2023 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 63,461 ஆக அதிகரித்துள்ளது. தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் கூற்றுப்படி, டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 38 ஆகவுள்ளது.

04

# பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமாக சமிந்த குலரத்ன



(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாராளுமன்ற பணிக்குழாம் பிரதானி மற்றும் பிரதி செயலாளர் நாயகமாக சட்டத்தரணி சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரதி செயலாளர் நாயகம் மற்றும் பணிக்குழாம் பிரதானியாக பதவி வகித்த டிக்கிரி ஜயதிலக்க மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமனம் பெற்றுள்ள நிலையில் அவரது வெற்றிடத்திற்கே சட்டத்தரணி சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற கட்சித் தலைவர்களின் பங்கேற்பு

04

# உத்திக MP மீதான துப்பாக்கி பிரயோகம்
### விசாரணைகள் CIDயிடம் ஒப்படைப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் தனிப்பட்ட காரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென பொலிஸார்

04

## கல்வியமைச்சின் சுற்றறிக்கையை மீறி
# வகுப்பு மாணவர்களுக்கு டியூஷன் கொடுத்த ஆசிரியர்கள்
### மத்திய மாகாணத்தில் 10 பேருக்கு இடமாற்றம்




மத்திய மாகாணத்தில் தமது வகுப்பு மாணவர்களுக்கு தனியார் பயிற்சி வகுப்புகளை நடத்திய 10 ஆசிரியர்கள் மாகாண கல்வி திணைக்களத்தினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்குக் காரணம், ஆசிரியர்கள் தங்கள் வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்பு

04

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது
# 21, 22 ஆம் திகதிகளில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விவாதம்

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை கூடவுள்ள நிலையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை மற்றும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு தினங்களில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான தெரிவுக்குழுவின் தீர்மானத்திற்கமைய பாராளுமன்றம் இன்றுமுதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை கூடவுள்ளது. தேசிய ஆட்பதிவு சட்டத்தின்கீழ் கட்டளை

04

# 3 மாதங்களுக்குள் 1500 மரண பரிசோதனை
### இருதய நோயாளரே அதிகளவில் மரணம்
திடீர் மரண பரிசோதகர் இரேஷா சமரவீர

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் திடீர் மரண பரிசோதனை மூலம் கடந்த மூன்று மாதங்களுக்குள் 1500 மரண பரிசோதனை இடம்பெற்றுள்ளதாகவும் அவற்றில் 50 வயதுக்கு குறைவான நபர்கள் 100 பேர் இருதய நோய் மற்றும் நீரிழிவுநோயினால் மரணமடைந்துள்ளதாகவும் கொழும்பு திடீர் மரண பரிசோதகர் சட்டத்தரணி இரேஷா சமரவீர

04

# USA ஜனாதிபதி தேர்தலில் விவேக் ராமசாமி போட்டி
### களமிறங்குவதை உறுதிப்படுத்தி பரப்புரை



அமெரிக்காவில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் குடியரசு கட்சி சார்பில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தாம் வெற்றி பெற்றால் H1B விசா முறை ஒழிக்கப்பட்டு மாற்று ஏற்பாடு செய்யப்படும் என இந்திய வம்சாவளி அமெரிக்கரான விவேக் ராமசாமி பரப்புரை செய்துள்ளார்.

04

# கஜேந்திரன் MP மீதான தாக்குதல்; ஐவர் கைதாகி விளக்க மறியலில்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)



திருகோணமலை – சர்தாபுரம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தரப்பினர் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தில், ஐந்து பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களை எதிர்வரும் 21 வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் நேற்று (18) இவர்களை ஆஜர்படுத்தியபோதே, இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

04

# தலைமன்னார் - கொழும்பு ரயில் சேவைகள் ஆரம்பம்
### ரயில்வே திணைக்கள அதிகாரி தெரிவிப்பு


லோரன்ஸ் செல்வநாயகம்



தலைமன்னாரிலிருந்து கொழும்புக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க தலைமன்னார் இறங்குதுறை ரயில் நிலையத்திலிருந்து அதிகாலை 4.15 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ரயில் முற்பகல் 10.34 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில்

04

# சீமெந்தின் விலை ரூ.100 அதிகரித்தது
### ஒரு பக்கட் ரூ. 2,200 ஆனது



சீமெந்தின் விலை மேலும் 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய நிர்மாணத்துறை சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகர தெரிவித்துள்ளார்.

சீமெந்து விலை 300 ரூபாவினால் குறைக்கப்படும் என வர்த்தக அமைச்சர் அறிக்கை வெளியிட்டபோதிலும்,

04

# நகர்வலம்



## அரசாங்க கணக்குகளில் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் இடம்பெறவில்லை;

# கடந்த வருட இறுதிக்குள் அரசாங்கம் பெற்றுள்ள கடன் 27 ட்ரில்லியன் ரூபா

## அரசாங்க கணக்குக் குழுவில் கணக்காய்வாளர் நாயகம் விக்ரமரட்ன



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கம் கடந்த ஆண்டு இறுதிவரை பெற்றுக் கொண்ட மொத்த கடன் தொகை 27 டிரில்லியன் ரூபாவாகும் என அரசாங்க கணக்கு குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரசாங்கத்தின் கணக்குகளில் கடன் தொடர்பான தகவல்கள் இடம்பெற்றிருந்தபோதும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதும் அந்த குழுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசாங்க கணக்குக் குழுவில் அது தொடர்பில் தெரிவித்துள்ள கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ. பி .சி. விக்ரமரத்ன;

கடந்த 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அமைய நிதி நிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் இரண்டு ட்ரில்லியன் ரூபாவாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் முழுமையான திட்டங்களுக்காக செலுத்தப்பட்ட கடன்கள் அன்றைய நிலவரப்படி 8 ட்ரில்லியனாக காணப்படுவதாகவும் மொத்தக் கடன் 27 ட்ரில்லியன் ரூபா என்றும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,கடன்கள் தொடர்பான விபரங்கள் உள்ள போதும் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் கிடையாது. அந்த வகையில் நாட்டின் சொத்துக்களின் மொத்த சேகரிப்பு எம்மிடம் காணப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த கணக்குக் குழுவில் கருத்து தெரிவித்துள்ள நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, நாம் 8 பில்லியனை கடனாக பெற்றுள்ளோம். 2 பில்லியனே சொத்துக்களாக காணப்படுகிறது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுடன் சரியான கணக்கை நாட்டுக்கு எதிர் காலத்தில் வெளியிடுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவரினால்

# களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரிக்கு பஸ் வண்டி அன்பளிப்பு



**(பாணந்துறை மத்திய குறுப் நிருபர்)**

எதிர்க்கட்சித் தலைவரின் "ஸக்வல" பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்துக்கான முதலாவது பாடசாலை பஸ் வண்டி

களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) க்கு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாடசாலை அதிபரிடம் பஸ் வண்டியின் ஆவணங்களை வைபவ ரீதியாக வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி அஜித் பெரேரா, மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜெமீல் , முன்னாள் களுத்துறை நகர பிதா ஆமீர் நஸீர், நகர சபை உறுப்பினர் ஹிசாம் சுஹைல், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



ஆசிய பசுபிக் வலய சாரணர் இணைப்பு கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் நடைபெற்றது. கடந்த 13 அம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த கருத்தரங்கில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சாரணர் தலைவர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். அத்துடன் உலக சாரணர் அமைப்பின் ஆசிய பசுபிக் சமாதான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் எஸ். பிரசன்ன ஸ்ரீவாஷ்ணவா, இலங்கை சாரணர் சங்கத்தின் சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனபிரித் பெர்னாண்டோ உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# 'அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள்' வெளியீட்டு விழா 23ஆம் திகதி கொழும்பில்




இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவை இணைந்து வெளியிடும் 'அன்னலட்சுமி இராஜதுரை சிறுகதைகள்' வெளியீட்டுவிழா எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பேராசிரியர் சபா. ஜெயராசா தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலுடன், செல்வி பிரியன்கா ஆன் பரான்சிஸ் தமிழ் வாழ்த்துபாடி ஆரம்பித்து வைப்பார்.

இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவற்றின் இணைப்பாளர் த. சிவசுப்பிரமணியம் (தம்புசிவா) வரவேற்புரையையும், தொடக்கவுரையும் நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளை ஞானம் கலை இலக்கிய சஞ்சிகயின் பிரதம் ஆசிரியர் மருத்துவர் ஞானசேகரன் மற்றும் கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை. எஸ். தில்லைநடராஜா ஆகியோர் வழங்குவார்கள்.

இந்நிகழ்வில் ஊடக அதிதிகளாக தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் இரா. சிவராஜா, வீரகேசரி நிறுவன பிரதம செய்தி முகாமையாளர் ஆர். பிரபாகன் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் உமாசந்திரா பிரகாஷ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல் விமரசனத்தை எழுத்தாளரும், 'தகவம்' செயலாளருமான திருமதி வசந்தி தயாபரன் முன் வைப்பார்கள்.

முதற் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்ள, சிறப்பு பிரதிகளை தொழில் அதிபர்களான திருமதி சண்முகப்பிரியா கார்த்திக், ராஜ்பிரசாத் விஸ்வாநதன் (துரைவி), கௌசல்யா கோவிந்தப்பிள்ளை ஆகியோருடன் பலர் சிறப்பு பிரதிகளை பெற்றுக்கொள்வர்.

ஏற்புரையை நூலாசிரியர் திருமதி அன்னலட்சுமி இராஜதுரை நிகழ்த்த, நன்றியுரையை இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம் மற்றும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகத்தின் ஊடக இணைப்பாளர் கலாபூஷணம் கே.பொன்னுத்துரை நிகழ்த்துவார். நிகழ்வுகளை மேமன் கவி தொகுத்து வழங்குவார்.

# யானை தாக்குதலில் ஒருவர் உயிரிழப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

திறப்பனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வெல்லமுதாவ பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை (16) யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதாக திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

திறப்பனை வெல்லமுதவ கிராமத்தைச் சேர்ந்த 63 வயதுடைய ஆர்.எஸ். ஏ.சந்திரசிறி திஸாநாயக்க என்ற விவசாயியே இவ்வாறு யானை தாக்குதலுக்கு உட்பட்டு உயிரிழந்தவராவர்.

இவர் தனது மோட்டார் சைக்கிளில் தனது சேனையை யானைகளிடமிருந்து பாதுகாக்க காவல் நடவடிக்கைகளுக்காக சென்று கொண்டிருந்த போதே குறிப்பிட்ட சேனை நிலத்துக்கு சுமார் 50 மீட்டர் தொலைவில் நின்று கொண்டிருந்த காட்டு யானை தாக்கியுள்ளது. இதனால் கடுமையான காயங்களுக்கு உட்பட அவர் உயிரிழந்துள்ளார். இவர் இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகி மயிரிழையில் உயிர் தப்பியவர் என குடும்ப உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

# உத்திக பிரேமரத்ன எம்.பியின் வாகனம் மீது துப்பாக்கி பிரயோகம்

## அநுராதபுரம் வீட்டுக்கு சென்றவேளை சம்பவம்



**அநுராதபுரம் மேற்கு, அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்**

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (17) இரவு அநுராதபுரத்திலுள்ள தனது வீட்டுக்கு சென்றிருந்த போது இனந்தெரியாத நபர்களினால் இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த. துப்பாக்கிச் சூட்டில் காரின் பின்பக்க கண்ணாடி சேதமடைந்துள்ளதுடன் அவருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். பாராளுமன்ற உறுப்பினர் அநுராதபுரம் விமான நிலைய வீதி பகுதியில் அமைந்துள்ள அவரது சொந்த வீட்டுக்கு தனது காரில் சென்று பிரதான நுழைவாயிலில் காரை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் நுழையும் போது துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாகவும் அவ்வேளையில் உறுப்பினர் காரிலிருந்து கீழே இறங்கி நின்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூடு பின் ஆசனத்தில் இருந்தவரை இலக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதை பின்பக்க கண்ணாடியின் சேதத்திலிருந்து அவதானிக்க கூடியதாகவுள்ளதாகவும் கைத்துப்பாக்கியை பயன்படுத்தியே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரைக்கும் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பல விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# ஹம்பாந்தோட்டை இக்ரா மாணவர்கள் தென் மாகாண போட்டிக்கு தெரிவு



**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

அகில இலங்கை தமிழ் மொழித்தின, ஹம்பாந்தோட்டை மாவட்ட ஆரம்பப் பிரிவு போட்டிகளில் கலந்துகொண்ட ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலய மாணவர்களில் நால்வர் முதலாம் இடத்தினைப் பெற்று தென் மாகாண போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பினை பெற்றள்ளனர்.

இவர்கள் பிரிவு 01. போட்டிகளில் கலந்து கொண்டு ஆக்கம் எழுத்துப் போட்டியில் எம். ஆர். எம். இப்ரா, பாவோதல் போட்டியில் வீ. கம்ஸிதா, பேச்சுப் போட்டியில் எஸ். என்.எம்.எப். நஸ்ஹா மற்றும் கதை கூறல் போட்டியில் எம். என். அம்மார் ஆகிய மாணவர்களே முதலாம் இடங்களைப் பெற்று தென் மாகாண போட்டிக்குத் தகுதி பெற்றள்ளனர். இவர்களுடன் வாசிப்புபோட்டியில் கலந்துகொண்ட மாணவி டீ. ஆர். எப். ரம்லா இரண்டாவது இடத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

# அநுராதபுரம் மாவட்டத்தில் உளுந்து, பயறு பயிர்ச்செய்கை திட்டம் வெற்றியளிப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

விவசாய அமைச்சின் கிராமிய பொருளாதார பயிர்ச் செய்கையினை ஊக்குவிக்கும் பிரிவால் அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட உளுந்து மற்றும் பயறு பயிர்ச்செய்கைத் திட்டம் வெற்றியளித்துள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் அநுராதபுரம் மாவட்ட விவசாய பணிப்பாளரும் மேற்பார்வை அதிகாரியுமான எச்.எல். தேனுவர தெரிவித்தார்.

மேற்படி பயிர்ச்செய்கைத் திட்டம் அநுராதபுரம் மாவட்டத்தின் பதவிய பிரதேச செயலாளர் பிரிவு தவிர்ந்த ஏனைய 21 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென விவசாய அமைச்சினால் 8.9 மில்லியன் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகளை தெரிவு செய்தல் பிரதேச செயலாளர்களின் கீழ் இயங்கும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக இடம் பெறும். ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 1960 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இலவசமாக பயறு மற்றும் உளுந்து விதைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதுடன் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட பயனாளிகளும் பெரிதும் நன்மையடைந்துள்ளார்கள் என விவசாய திணைக்களத்தின் மாவட்ட விவசாய பணிப்பாளர் எச்.எல். தேனுவர மேலும் தெரிவித்தார்.

# புத்தளம், கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சிறுவர் சந்தை

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் தெற்கு கோட்டத்திற்குட்பட்ட கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயம் மற்றும் நான்கு பாலர் பாடசாலைகள் இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலையின் மைதானத்தில் வியாழக்கிழமை (14) இடம் பெற்றது. கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் பி.எம்.முஸ்னி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் பைஸர் மரிக்கார் உட்பட கோட்டக் கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் , பழைய மாணவர் சங்கங்களின் உறுப்பினர்கள், பெற்றோர்கள் , நலன் விரும்பிகள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

பாடசாலைகள் தோறும் சிறுவர் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு கொடுக்கல் வாங்கல் உட்பட வியாபார நுட்பம் உள்ளிட்ட துறைகளில் களப்பயிற்சிகள் வழங்கப்படுவதே இச்சந்தையின் நோக்கமாகும். மேற்படி சிறுவர் சந்தையில் மரக்கறி கடைகள், சில்லறைக் கடைகள், பூமரக்கடைகள், கூல்பார் கடைகள், பேக்கரி உற்பத்திகள், புத்தக கடைகள், சிற்றுண்டிக் கடைகள், பழக் கடைகள், உணவகங்கள் உட்பட பல வர்த்தக நிலையங்கள் காணப்பட்டன.

# ஆங்கில தினப்போட்டியில்; மாகாண மட்டத்தில் முதல் இடம்

**கெக்கிராவ குறூப் நிருபர்**



அநுராதபுரம் கல்வி அபிவிருத்தி நிலையத்தில் கடந்த 09ஆம் திகதி நடைபெற்ற மாகாண மட்டத்திலான ஆங்கில தினப் போட்டியில் தரம் 11 இற்குரிய சொற்பொழிவாற்றல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அ/கலாவெவ முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவி ஜாபீர் பாத்திமா சம்ரா மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று, இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற அகில இலங்கை மட்ட போட்டிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இப்போட்டி நிகழ்வில் பங்குபற்றிய இப்பாடசாலையின் மாணவிகளான ஆர்.எப். ரம்லா, எம்.எப். மர்யம், எம்.ஆர்.இஸட். பதீனா மற்றும் ஏ.எப். சின்பா ஆகியோர் 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 19 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN


**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# யட்டியந்தோட்டை கராகொட பாலம் 460 மில். செலவில் அபிவிருத்தி

## நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் பந்துல குணவர்தன பங்கேற்பு

யட்டியந்தோட்டை கராகொட பாலத்தின் அபிவிருத்திப் பணிகள் 460 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்ரமசிங்கவின் வேண்டுகோளுக்கு அமைய அபிவிருத்தி செய்யப்படவுள்ள யட்டியந்தோட்டை கராகொட பாலத்தின் அபிவிருத்திப் பணிகள் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

04





# 2023 வாக்காளர் பதிவு இறுதி வடிவம் வெளியானது

## தமது பெயர்களை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை




இந்த ஆண்டுக்கான திருத்தப்பட்ட துணை வாக்காளர் பதிவு 2023 (1) வாக்காளர்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் சான்றளிக்கப்பட்டது.

இதனடிப்படையில், பொது மக்கள் தமது பெயர்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேட்டின் வரைவு மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் பொதுமக்கள் தங்களது பெயர்களை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்எனவும்தெரிவிக்கப்படுகின்றது.

18 வயது நிரம்பிய மற்றும் ஜனவரி 31, 2005 அன்று அல்லது அதற்கு முன் பிறந்தவர்கள் 2023 ஆம் ஆண்டில் தங்கள் வழக்கமான குடியிருப்பு முகவரியில் வாக்காளராகப் பதிவு செய்யத் தகுதியுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பதிவேட்டின் திருத்தம் தொடர்பான வாக்காளர்

04

# கஜேந்திரன் எம்.பியை தாக்கியமை கவலையளிக்கிறது

## – ரிஷாட் எம்.பி கண்டனம்



பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"சிறுபான்மைச் சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே இந்தத் தாக்குதல் வெளிப்படுத்துகிறது. சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்? பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாவது அல்லது அவமானப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகிறது?

பொலிஸாருக்கு முன்னால் இவ்வாறன அடாவடித்தனங்கள் இடம்பெறுவது சட்டவாட்சியை கேலிக்கூத்தாக்குகின்றது.

04

# கஜேந்திரன் MP மீது தாக்குதல் நடத்தியோரை கைது செய்க

## உடன் கைதுக்கு சுமந்திரன் MP வலியுறுத்து



திருகோணமலையில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை (17) தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீது தாக்குதல் மேற்கொண்டோர் அந்த ஊர்தியில் பயணித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் கற்கள், கொட்டன்கள் மற்றும் ஹெல்மட் கொண்டு கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிடும் போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது

04


# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகிறது.

| தொடர் இல. | பரீட்சை | நடைபெறும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | இலங்கை கல்வி நிர்வாக சேவை IIIஆம் வகுப்புக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021 (2023) | 2023 செப்டெம்பர் 23 | கொழும்பு |

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் www.doenets.lk இணையதளத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி :- 011-2785230/011-3661244/011-3661246
தொலைநகல் :- 011-2784232

**எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

5/5/2/AD2023
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை**
**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**

2023 செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி



# பெறுகை அறிவித்தல்

## அரச அச்சக கூட்டுத்தாபனம்

**விலைமனுக்களுக்கான அழைப்பு – (NCB)**
**இறக்குமதிகள்**

கீழேயுள்ள பண்டத்தின் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் உள்ளூர் முகவர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| FILE REFERENCE | QTY (M/Tons) | ITEM | BID BOND (Rs.) |
|---|---|---|---|
| SPC/SUP/F1/001/2023/21 | 300 (±5%) | Procurement of imported White Writing Paper in Reels/ 860mm/70(±2.5%) gsm | 1,000,000.00 |
| SPC/SUP/F1/001/2023/22 | 200 (±5%) | Procurement of imported White Writing Paper in Reels/ 610mm/70(±2.5%) gsm | 740,000.00 |
| SPC/SUP/F1/001/2023/23 | 200 (±5%) | Procurement of imported White Writing Paper in Reels/ 774mm/70(±2.5%) gsm | 740,000.00 |

1. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும்.
2. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக விலைமனுதாரர் பின்வரும் தகுதித்தன்மை தகவுத்திறனுடன் இணைந்தொழுகுதல் வேண்டும்.
   அ. முகவராண்மையின் நிலபரத்தை உறுதி செய்வதற்கான உற்பத்தியாளரின் அதிகாரம்/ அற்றோணித்தத்துவம்
   ஆ. செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வர்த்தக பதிவு
3. 2023.09.27 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. 2023.09.19 ஆம் திகதியிலிருந்து 2023.10.09 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு தொகுதிக்கும் 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி குறிப்பீடு குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், 2023.10.10 ஆம் திகதியன்று பி.ப.2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பாதுக்க, பாணலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன, வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம், பாணலுவ, பாதுக்க என்ற மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.
6. விலைமனுவானது அதனை மூடும் திகதியிலிருந்து 30 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கோரும்போது பெற்றுக் கொள்ளும் விலைமனு உத்தரவாத பண வைப்புக்கள் அல்லது நிபந்தனையற்றதும், தலைவர், அரச அச்சக கூட்டுத்தாபனம் என்ற முகவரிக்கு செலுத்தக்கூடிய வங்கி உத்தரவாதமானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 011-2757500 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக / தொலைநகலூடாக வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பணாலுவ, பாதுக்க.**
18.09.2023

SPC



# பெறுகை அறிவித்தல்

## ரிதீகம பிரதேச சபை

## 2024ஆம் ஆண்டில் ஆதனங்களைக் குத்தகைக்கு விடுதல்

2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு ரிதீகம பிரதேச சபைக்கு உரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வார சந்தைகள்/ இறைச்சி, மீன் கடைகளின் வர்த்தக உரிமையைக் குத்தகைக்கு விடுவதற்காக, 2023.09.14 முதல் 2023.10.09 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி விண்ணப்பப்படிவங்கள் இவ் அலுவலகத்தில் வழங்கப்படுவதுடன், கேள்விக்கான விண்ணப்பங்கள் 2023.10.10 அன்று பி.ப. 1.00 வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பிணைத் தொகை மற்றும் கேள்விப்படிவக் கட்டணங்கள் மற்றும் அரச வரிகளைச் செலுத்திய பின்னர் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் மாத்திரம் இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும். கேள்வி விண்ணப்பங்களை, 'செயலாளர், ரிதீகம பிரதேச சபை, ரிதீகம' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது, நேரடியாக ஒப்படைக்கலாம் நேரடியாக ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள், அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகளை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில், கேள்விக்கான வியாபாரம்/ ஆதனத்தின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். 2023.10.10 அன்று பி.ப. 1.10 இற்கு கேள்விக் குழுவின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் இல.0372252075 இன் மூலம் வருமானப் பிரிவை அழைத்து அல்லது எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

❖ கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

❖ இறைச்சிக் கடைகளிற்காக வியாபார நிலையங்கள் மற்றும் மாடறுக்கும் நிலையங்களைக் குத்தகைக்காரர் சுயமாகத் தயாரித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன், அனைத்து கேள்விகளிற்கும் டெண்டர் தொகைக்கு மேலதிகமாக முத்திரைவரி செலுத்தப்படல் வேண்டும்

❖ ரீதிகம பிரதேச சபையினால் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டவர்களுக்கு மற்றும் பிரதேச சபையின் சொத்துக்களை குத்தகைக்கு பெற்று இடைநடுவில் கைவிட்டு சென்ற அல்லது பிரதேச சபையுடனான உடன்படிக்கையை மீறியுள்ள நபர்களுக்கு இக் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க முடியாது.

| தொடர் இலக்கம் | ஆதனங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா. ச. | கேள்விப் பிணைத் தொகை ரூபா. ச. | ஆகக் குறைந்த கேள்வி ரூபா. ச. |
|---|---|---|---|---|
| 01 | இல 01 பானகமுவ மாட்டிறைச்சிக் கடையைக் குத்தகைக்கு விடுதல் | 3,000.00 | 30,275.00 | 605,500.00 |
| 02 | இல 02 பானகமுவ மாட்டிறைச்சிக் கடையைக் குத்தகைக்கு விடுதல் | 3,000.00 | 88,100.00 | 1,762,000.00 |
| 03 | தெளம்புகல்ல மாட்டிறைச்சிக் கடையைக் குத்தகைக்கு விடுதல் | 3,000.00 | 48,250.00 | 965,000.00 |
| 04 | தல்கஸ்பிட்டிய மாட்டிறைச்சிக் கடையைக் குத்தகைக்கு விடுதல் | 3,000.00 | 27,750.00 | 555,000.00 |

**வீ.ஏ.எஸ்.என்.திலகரத்ன**
**செயலாளர்**
**ரிதீகம பிரதேச சபை, ரிதீகம.**
**2023.09.19**


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |





ஸ்ரீமத் அனகாரிக தர்மபாலவின் 159 ஆவது நினைவு தினத்தையொட்டி ஞாபகார்த்த நிகழ்வொன்று ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் உள்ளிட்ட தரப்பினரால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஹோமாகம நகர பகுதியில் அமைந்துள்ள தர்மபாலவின் உருவச்சிலைக்கு அருகில் இந்த நிகழ்வு இடம் பெறுவதையும் அதில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# அவசரமாக சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 41 வயதான ஆண் ஒருவருக்கு மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையை அடுத்து அவசரமாக சிறுநீரக உறுப்புமாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. O பொசிட்டிவ் வகைச் சிறுநீரகத்தை தானம் செய்யவிரும்பும் அன்பர்கள் அவசரமாக +94 77 859 3565 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## எரிபொருள், சுகாதாரம்,...

வாழ்க்கையைப் பேணுவதற்கு அத்தியாவசியமான சேவைகளுக்கு தடை அல்லது இடையூறு ஏற்படக்கூடும் என கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற பொது நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, உணவளித்தல் மற்றும் சிகிச்சைக்கு தேவையான அல்லது செய்ய வேண்டிய அனைத்து சேவை, வேலை அல்லது உழைப்பு ஆகியவையும் இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பெயரிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## 3 மாதங்களுக்குள்...

தெரிவித்துள்ளார். அதேவேளை, 50 60 க்கிடையில் 200 மரணங்கள் இருதய நோய் மற்றும் நீரிழிவுநோயினால் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட இந்த காலகட்டத்திற்குள் ஏற்பட்டுள்ள திடீர் மரணங்களில் 1/3 பங்கு இருதயநோய் காரணமாக ஏற்பட்ட மரணங்களென்றும் இருதய நோய் காரணமாக இளைஞர் யுவதிகள் மரணமடையும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார் . மரணமடைந்துள்ள குடும்பங்களின் உறுப்பினர்கள தெரிவிக்கும் தகவல்களுக்கிணங்க, அவர்கள் தொழில்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக வீட்டிலிருந்து வெளிச் செல்லும் சமயத்தில் வெளியிடங்களிலேயே உணவை உட்கொள்ளும் பழக்கத்தை கொண்டுள்ளார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

## USA ஜனாதிபதி...

குடியரசுக்கட்சியில் இருந்து வேறு எவரும் தன்னை எதிர்த்து போட்டியிடக்கூடாது என ட்ரம்ப் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அவர் தனது தேர்தல் பிரசாரத்தில் கலந்துக் கொண்டுமேலும்கருத்துதெரிவிக்கையில், இந்தியாவில் மென்பொருள் துறையில் செயல்படும் அனைவரும் பொதுவாக விண்ணப்பிக்கும் இந்த விசாவானது, அமெரிக்க நிறுவனங்கள் வெளிநாட்டு ஊழியர்களை பணியமர்த்திக்கொள்ள அனுமதிக்கின்றது.

இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு தொழில்நுட்ப நிறுவனங்கள் H1B விசா முறையை நம்பியுள்ளன.

இந்த முறையை ஒழிக்க வேண்டும் என வாதிடும் விவேக் ராமசாமியும், இதுவரை 29 முறை இந்த விசா வாய்ப்பினை பயன்படுத்திக்கொண்டுள்ளார்.

## கஜேந்திரன் MP...

கைதானவர்களில் இரு பெண்களும் உள்ளடங்குகின்றனர். சீனன்குடா பொலிஸார் இவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து 1987 செப்டம்பர் 15 இல்,உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த திலீபனை நினைவு கூர்ந்து நடாத்தப்பட்ட ஊர்வலத்திலே,கஜேந்திரன் எம்பி உள்ளிட்ட பலர் தாக்கப்பட்டனர்.திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியொன்று பொத்துவிலிலிருந்து அவர் உயிர்நீத்த இடமான யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியை நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.இவ்வூர்வலம்,மூதூர், சேனையூர், தம்பலகாமம் பகுதிகள் ஊடாக திருகோணமலை நகரத்தை நோக்கி, பயணித்துக் கொண்டிருந்த போது சர்தாபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (17) சிலரால் தாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களுக்கு ஆறு குற்றச்சாட்டுக்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. கைதானோரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தலைமன்னார் ...

நிலையத்தை வந்தடையுமென ரயில்வே உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதேவேளை, பிற்பகல் 3.35 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் ரயில் இரவு 10.48 மணிக்கு தலைமன்னார் இறங்குதுறை ரயில் நிலையத்தை சென்றடையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி ரயிலில் குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்பு பெட்டிகள் இரண்டும் முன்பதிவுசெய்யக்கூடிய இரண்டாம் வகுப்பு பெட்டிகள் இரண்டும் மூன்றாம் வகுப்பு பெட்டிகளும் உள்ளடங்குவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சீமெந்தின் விலை...

அதன் விலை மேலும் 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் இரண்டாயிரத்து 100 ரூபாவாக காணப்பட்ட சீமெந்து மூடையொன்று, தற்போது, இரண்டாயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 21, 22 ஆம் திகதிகளில்....

மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சபை சட்டத்தின் கீழ் 2334/47 ஆம் இலக்க வர்த்தமானியில் வெ ளியிடப்பட்டுள்ள கட்டளைச்சட்டம் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதனையடுத்து சபை ஒத்திவைப்புவேளை விவாதமாக மாலை 5 மணிமுதல் 5.30 வரை அந்த விவாதம் இடம்பெறுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குசானி ரோகணதீர தெரிவித்துள்ளார். வனப் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் கீழ் 2346/02 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளைச்சட்டம் நாளை 20 ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதுடன் அதனையடுத்து ஆளும் கட்சியினால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்புவேளை மீதான விவாதம் மாலை 5 மணிக்கு இடம் பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வகுப்பு மாணவர்களுக்கு...

நடத்தக் கூடாது என்று பிறப்பிக்கப்பட்ட சுற்றறிக்கையை மீறியதே. குறித்த சுற்றறிக்கையை மீறிய இந்த பத்து ஆசிரியர்கள் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. அமைச்சின் பரிந்துரையின் பிரகாரம் திணைக்களம் இதனை நடைமுறைப்படுத்தியுள்ளது. இந்த ஆசிரியர்களில் பலர் இடமாற்றத்தை ஏற்காமல் மேல்முறையீடு செய்துள்ளதாகவும், இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது . மேன்முறையீட்டு விசாரணையின் பின்னர் ஆசிரியர் இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர் சேவையை விட்டு விலகியதாகவே கருதப்படுவார் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் சுற்றறிக்கையை மீறும் ஆசிரியர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு சோதனைப் பிரிவையும் ஆரம்பித்துள்ளது. வகுப்புகளுக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் விசேட சலுகைகளை அளிப்பதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் காரணமாக அமைச்சு தனது வகுப்பில் உள்ள பிள்ளைகளுக்கான பயிற்சி வகுப்புகளை தடை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

## உத்திக MP...

தெரிவித்துள்ளனர். அது தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பு சி.ஐ.டியினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. தேசிய சுதந்திர முன்னணி எம்.பியான உத்திக பிரேமரத்னவின் காரை இலக்குவைத்து இனந்தெரியாத குழுவொன்று துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.35 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டுக்கு முன்பாக இந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. அவர், தமது கடமை தொடர்பில் வெளியில் சென்றுவிட்டு மீண்டும் வீடு திரும்பிய போதே இந்த துப்பாக்கிச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் எனினும் அவருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்தவகையில் காரின் பின்புற ஆசனப் பகுதியிலேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சமூக வலைதளங்களில்....

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. காதல் உறவின் போது எடுக்கப்பட்ட அந்தரங்க மற்றும் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சமூக ஊடகங்கள் மூலம் பரப்புவதை தடுக்கும் வகையில் இந்த புதிய சட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், இதனால் அந்த உறவு முறிந்த பிறகு மற்றவர்களை துன்புறுத்தும் சம்பவங்களை தடுக்க முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதன்முறையாக இத்தகைய குற்றத்தில் ஈடுபட்ட ஒருவருக்கு ஐந்தாண்டுகளுக்கு குறையாமல் சிறைத்தண்டனையும் அல்லது ஐந்து லட்சம் ரூபாவுக்கு குறையாமல் அபராதமும் விதிக்கப்படும். மேலும் இரண்டாவது முறை குறித்த குற்றத்தை புரிபவருக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் இரட்டிப்பாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## GCE A/L பரீட்சையை ...

விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பான முடிவுகள் இறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள், சுகாதாரம்,... வாழ்க்கையைப் பேணுவதற்கு அத்தியாவசியமான சேவைகளுக்கு தடை அல்லது இடையூறு ஏற்படக்கூடும் என கருதி இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற பொது நிறுவனங்களில் நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பாதுகாப்பு, உணவளித்தல் மற்றும் சிகிச்சைக்கு தேவையான அல்லது செய்ய வேண்டிய அனைத்து சேவை, வேலை அல்லது உழைப்பு ஆகியவையும் இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பெயரிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## நாட்டில் டெங்கு...

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தலா 13,000 க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி 2023ஆம் ஆண்டு மேல் மாகாணத்தில் 30,800 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல்மாகாணத்தில் பாரியளவிலான நோய்த்தொற்றுக்கு மேலதிகமாக கண்டி மாவட்டத்தில் 5,398 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதிகளவான டெங்கு நோயாளர்கள் ஜூன் மாதத்தில் பதிவாகியுள்ளனர். இம்மாதத்தில் மொத்தம் 9,916 டெங்கு வழக்குகள் பதிவாகியுள்ளன, மே மாதத்தில் 9,696 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் .

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு 10 பிரதேசங்களை டெங்கு அபாய வலயங்களாக அறிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், நாட்டின் தென்மேற்குப் பகுதியில் பெய்து வரும் கடும் மழையினால் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கக் கூடும் என டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் சுமார் 140 வகையான நுளம்புகள் இருப்பதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் ஏடிஸ் எஜிப்டி மற்றும் ஏடிஸ் அல்போபிக்டஸ் வகை நுளம்புகள் டெங்கு வைரஸை மனிதர்களுக்கு பரப்புகின்றன. இவற்றின் இனப்பெருக்க சுழற்சி 8 முதல் 10 நாட்கள் வரை இருக்கும் எனவே பொதுமக்கள் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## பாராளுமன்ற...

டனான பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான தெரிவுக்குழுவின் அனுமதியையடுத்து பாராளுமன்ற பணிக்குழு ஆலோசனை சபை மூலம் மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்ததுடன் கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உயர்மட்ட நேர்முகப் பரீட்சை சபை மூலம் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அந்தப் பதவிக்கு சட்டத்தரணி சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகரின் தலைமையிலான மேற்படி நேர்முகப்பரீட்சைக்கான குழு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபை முதல்வர், எதிர்க் கட்சியின் பிரதம கொரடா மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

## நிர்மாணத்துறையை மீண்டும்...

டபிள்யூ.எஸ். சத்தியானந்தவினால் அந்த யோசனைகள் உள்ளடங்கிய கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதேவேளை, இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிர்மாணத்துறையை மீளக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான கொள்கைகள் அறிமுகப்படுத்தப்படுமென்று அவர் தெரிவித்துள்ளார். நாட்டின் சனத்தொகையில் 20 வீதமான மக்கள் நிர்மாணத்துறை செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாவர்.

அந்தவகையில் அந்தத் துறை வீழ்ச்சியடையுமானால் சனத்தொகையில் ஐந்தில் ஒருபகுதி மக்களின் வாழ்க்கையில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமானது நாட்டின் நிர்மாணத் துறையை கட்டியெழுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில் அந்தத் துறைக்கு தேவையான நிதி மற்றும் நிதி தவிர்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வுபெற்றுக்கொடுப்பதற்கும் அரசாங்கம் விரைவான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா.பொதுச்சபையின்...

இந்த கூட்டத்தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நடைபெற உள்ளதுடன் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை நியூயோர்க் நகரை சென்றடைந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை கூட்டத் தொடருக்கு சமகாலத்தில் நடைபெறும் '2023 நிலையான அபிவிருத்தி இலக்கு' அரச தலைவர்கள் மாநாடு நேற்று ஆரம்பமாகியுள்ளதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதில் கலந்து கொண்டுள்ளார்.

2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல்.

அதற்கான நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளுதல் என்ற தொனிப்பொருளில் இம்முறை கூட்டத்தொடர் இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் ஜனாதிபதி பல்வேறு நாடுகளில் தலைவர்களை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பல்கலைக்கழகங்களில்....

சம்பவங்கள் குறைந்துள்ளதைக் காணமுடிகிறது. அத்துடன் பல்வேறு காரணங்களினால் வகுப்புத்தடைக்கு இலக்காகியுள்ள 57 மாணவர்கள் காணப்படுகின்றனர்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு 3,63,000 மாணவர்கள் தோற்றியதுடன், அவர்களில் 1,63,000 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கான தகைமையைப் பெற்று க்கொண்டுள்ளனர். எனினும் 45,000 மாணவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படும். ஏனைய மாணவர்கள் தொடர்பில் சிறந்த வேலைத்திட்டமொன்று அவசியமாகும். பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் உபவேந்தரில் இருந்து கீழ் மட்ட பணியாளர்கள் வரை அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். இந்த வகையிலும் பல்கலைக்கழக கட்டமைப்பிற்குள் இருந்து பகிடிவதையை முழுமையாக இல்லாதொழிப்பது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் செயலாளர் கலாநிதி பிரியந்த பிரேமகுமார, மனித உரிமை ஆணைக் குழுவின் சட்ட அதிகாரி சட்டத்தரணி ரணில் அபேநாயக்க, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொழில்நுட்ப தகவல்கள்...

இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இந்த அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் குறித்த துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (18) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் மின்சார சபைக்கு சொந்தமான நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை எடுத்துச் செல்லும் அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் சுரங்கப்பாதைகளின் தொழில்நுட்பப் பாதுகாப்புக் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

## யட்டியந்தோட்டை... (03 ஆம் பக்கத் தொடர்)

தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

களனி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள 120 வருடங்கள் பழமையான கராகொட இரும்புப் பாலம் தற்போது மிகவும் சிதிலமடைந்துள்ளது.

அதன்படி புதிதாக கட்டப்படும் பாலம் 120 மீட்டர் நீளமும், 3.8 மீட்டர் அகலமும் கொண்டது. 2 வழிச்சாலையுடன் கட்டப்படும் இந்தப் பாலத்துக்கு 460 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சப்ரகமுவ மாகாண சபையால் 150 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

'2022ஆம் ஆண்டு முழு இலங்கை மக்களிடமிருந்தும் பெறப்பட்ட வரி வருமானம் 1751 பில்லியன் ரூபா. அதில் அரசாங்க ஊழியர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்காக 1265 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இது மொத்த வரி வருமானத்தில் 72வீதம் ஆகும். சமுர்த்தி உள்ளிட்ட மானியங்களுக்காக 506 பில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. மொத்த வரி வருமானமும் அவற்றிற்கே செலவாகிறது.

எந்த அரசாங்கம் வந்தாலும் , ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை என யாரை நியமித்தாலும், மாதாந்த சம்பளம், ஓய்வூதியம், மானியம் கொடுத்து மீதியில் எப்படி ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதுதான் முதலில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை.

1751 பில்லியனுக்கும் அதிகமாக வரி வருவாயை அதிகரிக்க எந்தெந்த துறைகளுக்கு அதிக வரி விதிக்கப்பட வேண்டும் என்பதை எதிர்கட்சியினரிடம் கேட்க வேண்டும். அரசு ஊழியர் சம்பளம், ஓய்வூதியம் வழங்காமல் இருக்க முடியுமா? சமுர்த்தி சலுகைகளை குறைக்க முடியுமா? அதைத் தவிர அரச கடனுக்கான வட்டியாக 1500 பில்லியனுக்கும் அதிகமான தொகையை செலுத்த வேண்டும். அந்த வட்டி அனைத்தும், மூலதனச் செலவும் கடன் வாங்கி ஈடுகட்டப்பட்டது. 2022 ஆம் ஆண்டில், அரசாங்கத்தின் செலவு சுமார் 4500 பில்லியனாக இருக்கும். வருமானம் 2000 கோடிக்கும் குறைவு. எனவே, யாருடைய அரசாங்கமாக இருந்தாலும், ஆண்டுக்கு இரண்டாயிரத்து ஐநூறு கோடி ரூபா கடன் வாங்க வேண்டும்.

இதன் காரணமாக, யார் ஆட்சியை நடத்தினாலும், நாடு தாங்க முடியாத அளவுக்கு வரவு செலவு பற்றாக் குறை இடைவெளி ஏற்பட்டுள்ளது. இந்த இடைவெளியை ஈடுகட்ட உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கடன் வாங்கப்பட்டுள்ளது. அதுவும் போதாதென்று பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடனைத் தொடர்ந்து செலுத்தி வந்தாலும், ஒரு கட்டத்தில் இந்தக் கடனை அடைக்க முடியாமல் போனது இதனால் நாடு வங்குரோத்தானது.

இலங்கை வரலாற்றில் இவ்வாறானதொரு நிலை நாட்டில் ஏற்படும் என்று கண்ட ஒரே அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்றார்.

## 2023 வாக்காளர் பதிவு... (03 ஆம் பக்கத் தொடர்)

கணக்கெடுப்பு படிவம் (BC படிவங்கள்) ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படவில்லை.

மேலும், அந்தந்த கிராம நிர்வாக அலுவலர் ஒவ்வொரு வீட்டிற்கும் வாக்காளர்களின் பெயர் பட்டியலை தற்போது செல்லுபடியாகும் பட்டியல் மற்றும் குடும்பத் தலைவரின் கீழ் கொண்டு வரும் பட்சத்தில் பட்டியலின் துல்லியத்தை உறுதிப்படுத்த கையொப்பமிட வேண்டும்.

எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் எந்தவொரு தேர்தலும் திருத்தப்பட்ட 2023 வாக்காளர் பதிவேட்டைப் பயன்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கஜேந்திரன் எம்.பியை... (03 ஆம் பக்கத் தொடர்)

சட்டத்தின் ஆட்சியை பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பே கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

## கஜேந்திரன் MP மீது... (03 ஆம் பக்கத் தொடர்)

பொலிஸார் முன்னிலையில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தத் தாக்குதல் நடத்தியவர்களை இலகுவில் அடையாளம் காணும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மன்னிப்பின் வழி மன்னிப்பு

## ஆண்டவர் இயேசு கற்றுத் தரும் பாடம்

கிறிஸ்தவம் மன்னிப்பு மற்றும் அன்பு எனும் அடித்தளத்திலேயே கட்டப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்த ஞாயிறு வழிபாடுகள் மன்னிப்பின் மகத்துவத்தை வலியுறுத்துகின்றன.

மத்தேயு நற்செய்தியில் காணப்படும் குழுமப் பொழிவிலிருந்து அன்றைய நற்செய்தி வாசகம் எடுக்கப்பட்டுள்ளது.

குழுமத்தில் தமக்கு எதிராகத் தீங்கிழைக்கும் ஒருவருரை எத்தனை முறை மன்னிப்பது என்பது பேதுருவின் கேள்வியாக இருக்கிறது.

யூத மரபில் ஏழு என்பது நிறைவின் அடையாளம் மட்டுமல்ல தாராள உள்ளத்தின் அடையாளமும் கூட.

இயேசு தன் சீடர்களுக்கு அது தொடர்பில் சிறந்த பாடத்தைக் கற்பிக்கின்றார்.

'என் சகோதரன் எனக்கு எதிராகப் பாவம் செய்தால் எத்தனை முறை மன்னிக்க வேண்டும்?' எனக் கேட்கிற பேதுருவுக்குப் பதில் சொல்கின்ற இயேசு, 'ஏழுமுறை அல்லது எழுபது முறை ஏழு முறை' என்கிறார்.

மேலும், அன்றைய நற்செய்தியில் மன்னிக்க மறுத்த பணியாள் ஒருவனின் எடுத்துக்காட்டையும் இயேசு முன்வைக்கின்றார்.

பணியாளன் ஒருவன் தன் அரசனிடம் பெற்றுக் கொண்ட ஏறக்குயை 510 கோடி ரூபா கடனுக்கு மன்னிக்கப்படுகிறார். ஆனால், அந்தப் பணியாளன் தன் சக பணியாளின் வெறும் 10 ஆயிரம் ரூபா கடனை மன்னிக்க மறுக்கின்றான்.

நிறைய வைத்திருந்த அரசனுக்கு மன்னிப்பது எளிதாகவும், ஒன்றுமே இல்லாத பணியாளனுக்கு அவ்வாறு செய்வது கடினமாக இருந்ததோ?

அரசனிடமிருந்து மன்னிப்பைப் பெற்ற பணியாளன் தன் சக பணியாளனை மன்னிக்க வேண்டும். அவன் தனக்குக் கீழ் இருப்பவனை, அவன் இன்னும் தனக்குக் கீழ் ... என்று அடுத்தடுத்து மன்னித்துக் கொண்டே இருக்க வேண்டும். என்பதாக இயேசு கூறுகிறார்.

இதில் முதல் பாடம், கடவுளிடமிருந்து அன்றாடம் மன்னிப்பு பெறுகின்ற நாம், அதை நமக்குக் கீழ், நமக்குக் கீழ் என்று கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

இரண்டாவது பாடம், 70 முறை 7 முறை. இந்தச் சொல்லாடலுக்கு நிறைய பொருள் தரப்படுகிறது. தொடக்க நூல் 4:24ல் லாமேக்கு என்பவர் 70 முறை 7 முறை எனப் பழிதீர்க்கிறார்.

இந்த நிகழ்வின் பின்புலத்தில் பழிதீர்ப்பதற்கு எதிர்ப்பதமாக இயேசு மன்னிப்பை முன்வைக்கிறார் என்று சொல்லலாம்.

இன்றைய உளவியலில் 21 நாள்கள் (அதாவது, மூன்று 7 நாள்கள்) ஒரு செயலைச் செய்யும்போது அது நம் பழக்கமாகிவிடுகிறது என்கிறார்கள். அதாவது, 21 நாள்கள் நான் காலை 5 மணிக்கு எழுந்தால்.22ஆம் நாள் எந்தவொருவரும் எழுப்பாமல் நான் 5 மணிக்கு எழுந்துவிடுவேன்.

இயேசுவின் சமகாலத்தில் இதைப் போன்ற ஒரு புரிதல் இருந்திருக்கலாம்.

ஆக, 70 முறை 7 முறை செய்யும் போது மன்னிப்பு பல் தேய்ப்பது போன்ற ஒரு தொடர் பழக்கமாக மாறிவிடுகிறது. தொடர்பழக்கமாக ஒரு செயல் மாறிவிட்டால் அது நம் இயல்பாகவே மாறிவிடுகிறது.

இந்த பயிற்சியைத்தான் இயேசு தருகின்றார்.



மூன்றாவதாக, மன்னிப்பது மன்னிப்பவருக்கு நல்லது. ஏனெனில், மன்னிக்க மறுக்கும் ஒருவர் தன் நிகழ்காலத்தில் வாழாமல் இறந்த காலத்தில் வாழ்கிறார்.

எந்நேரமும் அதைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பார்.

இறந்த காலம் என்பது நம் மனத்தின் ஒரு அழுகிய பகுதி. அதை நாம் அப்படியே வைத்துக்கொண்டிருக்கும்போது அது துர்நாற்றத்தைத் தருவதோடு, நல்ல பகுதிகளையும் அழிக்கத் தொடங்கிவிடுகிறது.

மேற்காணும், இரண்டு காரணங்களுக்காக இல்லை என்றாலும், இறுதியான மூன்றாவது காரணத்திற்காக மன்னிக்கத் தொடங்கினால் மனது நலமாகும்!

இயேசு வழங்கும் உவமையில் அரசர் தன் பணியாளரை மன்னிக்கின்றார். ஆனால், அந்தப் பணியாள் தன் சகபணியாளை மன்னிக்க மறுக்கின்றார். தான் மன்னிக்கப்பட்டதை மறக்கின்றார். அவருடைய மன்னிக்காத செயல் அவருக்கு எதிராகத் திரும்புகிறது.

ஏன் அந்தப் பணியாளரால் மன்னிக்க இயலவில்லை? இரக்கம் என்பதை மறந்து நீதி என்ற தளத்தில் செயலாற்றினான் அவன்.

எனக்கு எதிராகத் தீங்கிழைக்கும் ஒருவருக்கு நான் தீங்கிழைப்பது நீதியே. ஆனால், இரக்கம் என்பது நீதியைத் தாண்டுகிறது.

அரசரைப் போல இருக்க வாய்ப்புக் கிடைத்தும், அந்தப் பணியாளன் ஒரு பணியாளனாகவே இருக்க முற்பட்டான். அரச நிலைக்கு உயர்ந்தால், நம் எண்ணங்கள் உயர்ந்தால் மன்னிப்பு நம் இரண்டாம் இயல்பாகிவிடும்.

மன்னிக்க இயலாதவர்களுக்கு மறுக்கப்படுகிற ஐந்து விடயங்கள் பற்றிப் பேசுகிறது விவிலியம்:

மன்னிக்காதவர்களின் இறைவேண்டல் கேட்கப்படுவதில்லை ( மத் 11:24).

மன்னிக்காதவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படுவதில்லை (சீஞா 28:1).

மன்னிக்காதவர்களுக்கு கடவுள் இரக்கம் காட்டுவதில்லை ( யாக் 2:13).

மன்னிக்காதவர்களின் நோய்கள் குணமாவதில்லை (சீஞா 28:3, நீமொ 17:22).

மன்னிக்காதவர்களின் பலிகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை ( மத் 5:23 24).

மன்னிக்கும் வழக்கத்தை நமது வாழ்விலும் தொடர்ச்சியாக கடைபிடிப்போம். ஆண்டவர் நம்மை மன்னிப்பது போல நாமும் எமக்கு குற்றம் இழைத்தவர்களை தொடர்ந்தும் மன்னிப்போம்.

தினமும் நாம் செபிக்கும் இயேசு கற்றுத்தந்த பரலோக செபத்தை எமது வாழ்வாக்குவோம்.

**அருட்பணி**
**யேசு கருணாநிதி**



## கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித தெரேசாள் ஆலய திருவிழா 22 ஆம் திகதி கொடியேற்றம்

கொழும்பு திம்பிரிகஸ்யாய புனித தெரேசாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தினமும் நவ நாள் வழிபாடுகள் மற்றும் திருப்பலி பூசைகள் இடம் பெற்று

எதிர்வரும் 30ஆம் திகதி மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெறும்.

அதனையடுத்து புனித தெரேசாளின் திருச்சுருப பவனி இடம் பெறவுள்ளதுடன்

அக்டோபர் முதலாம் திகதி காலை திருவிழா திருப்பலி பங்குத்தந்தை சந்தன பெரேரா அடிகளாரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.




## மாதாவின் பிறந்தநாள் விசேட திருப்பலி



கொழும்பு பொல்ஹேன்கொட திரு இருதயநாதர் ஆலயத்தில் கடந்த 8ஆம் திகதி மாதாவின் பிறந்த தினத்தையொட்டி விசேட திருப்பலி பூசை அருட்தந்தை பிரகீத் டிஷான் தலைமையில் இடம்பெற்றது. திருப்பலிக்குப் பின்னர் பிறந்த நாளை சிறப்பிக்கும் வகையில் கேக் வெட்டப்பட்டு விசுவாசிகளுக்கு வழங்கப்பட்டதுடன் திருப்பலியில் கலந்து கொண்ட தாயொருவர் அருட்தந்தைக்கு கேக் ஊட்டி மகிழ்வதையும் திருப்பலி பூசை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

படங்கள் உதவி: லெஸ்லி ஜொனதன்

# வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் மாதா வியாகுல அன்னை திருவிழா

புளோரன்ஸ் நகரைச் சேர்ந்த ஏழு வணிகர்களுக்கு அன்னை மரியாள் தனித்தனியே காட்சி தந்து செனாரியோ என்ற மலைக்கு வரும்படி அழைத்தார் . அங்கே ஒன்று கூடிய எழுவரும் ஜெபிப்பதையும், வியாகுலங்களின் பக்தியைப் பரப்புவதையும் , மக்களைப் பாவம் , தீமையிலிருந்து விடுவிப்பதையும் தங்களது முதற்கடமையாகக் கொண்டிருந்தனர்.

அவர்களது வாழ்வு மரியன்னைக்கு ஊழியம் புரிவதாக இருந்ததால் அன்னை தாமே வெளிப்படுத்திய "மரியின் ஊழியர்" என்ற பெயரையே தமதாக்கிக் கொண்டனர்.

இவ்வாறு தொடங்கிய வியாகுல அன்னையின் பக்தி கி.பி.1814 இல் பாப்பரசர் 7ஆம் பத்திநாதர், நாடு கடத்தப்பட்டதிலிருந்து மீளவும், உரோமை நகர் வந்தடைந்தமைக்கு நன்றியாக வியாகுல அன்னைக்கு விழா கொண்டாடும்படி அறிவித்தார்

வியாகுல அன்னை 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசுவின் சிலுவையருகில் நின்று இயேசுவின் துன்பத்தில் பங்கேற்றார். இன்றைய நவீன கால சிலுவைகளாகிய வறுமை, பிணி, அறியாமை, வன்முறை, அடக்குமுறை, இயற்கையை அழித்தல், பண்பாட்டுச் சீரழிவு, தேவையற்ற கலாச்சார மாற்றம் போன்ற சிலுவைகளில் அன்றாடம் மக்கள் அறையப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே இத்தகைய சிலுவைகளிலிருந்து மக்களை மீட்க ஒவ்வொருவரும் உறுதி எடுக்க வேண்டும். இதுவே வீரத்தாயாம் வியாகுல அன்னைக்கு நாம் செய்யும் நன்றியாகும்

நம் அன்னை தன் அன்பு மகனின் பிறப்பு முதல் இறப்பு வரை எண்ணற்ற துன்பங்களை அனுபவித்தார்கள். துணை மீட்பராக விளங்கிய நம் தாய் தன் மகனின் பாடுகளில் தனது மாசுமருவற்ற தூய இருதயத்தை அடித்து நொறுக்கி செயலிழக்க செய்வது போன்ற வேதனையை அனுபவித்தார்.

இவ்வாறு வானவனின் வார்த்தைக்கு 'ஆகட்டும்' என, தன்னைக் கையளித்த நாள் முதல் நம் தாய் அனுபவித்த வியாகுலங்கள் பற்பல. என்றாலும் நம் தாயாம் திருச்சபை அவற்றில் ஏழு வியாகுலங்களைப் பற்றி தியானிக்க அழைக்கிறது

முதல் வியாகுலம்சிமியோனின் இறைவாக்கு

லூக் 2: 25 முதல் 35

இந்த முதல் வியாகுலத்தில் அன்னை மரியாள் தன் குழந்தையை யூத பாரம்பரியப்படி கோவிலில் காணிக்கையாகக் கொண்டு செல்கிறார் .அங்கே பல ஆண்டுகளாக வாக்களிக்கப்பட்ட மீட்பராகிய மெசியாவின் வருகைக்காகக் காத்திருந்த முதியவர் குழந்தையைக் கையில் எடுத்து " இதோ இக்குழந்தை பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாகத் திகழும்; எதிர்க்கப்படும் அடையாளமாகவும் விளங்கும் " என்றார் . மேலும் அதன் தாயாகிய மரியாவைப் பார்த்து " உமது இதயத்தை ஒரு வாள் ஊடுருவும் " என்றார்.




அது ஒரு கொடுமையான வாழ்த்து! இதுவரை எந்தத் தாயும் தன் மகனைப் பற்றி முதன் முதலில் கேட்டிராத வாழ்த்து இது . இன்று குழந்தை பிறந்தவுடன் கூடும் உறவுகள் உன் மகன் நன்கு படிப்பான் ,பெரிய ஆளாக வருவான். உன் குடும்பப் பெயரை சிறக்கச் செய்வான் போன்ற வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் சூழலில் இப்படியும் ஒரு வாழ்த்து .

இறைவனால் வாக்களிக்கப்பட்ட தன் மகனுக்கும் அவரால் தனக்கும் நேர இருக்கும் கொடுமையை அறிந்தும் அன்னை பதறவில்லை.. காரணம் , எல்லாம் இறை திருவுளம் என்று ஏற்கும் மனப்பக்குவமாகும் இந்தத் துணிவு நமக்கும் வாய்க்கப்பெற ஜெபிப்போம்

இரண்டாம் வியாகுலம்குழந்தையுடன் எகிப்துக்கு தப்பி ஓடுதல்

மத் 2:13,14

இரண்டாம் வியாகுலத்தில் மரியாள் , தன் மகன் இயேசுவைக் கொல்லத் திட்டமிட்ட ஏரோதுக்குப் பயந்து , வானவரின் வழிகாட்டுதலின் பேரில் எகிப்துக்குத் தப்பியோடி அங்கே வாழ்கின்றார். எங்கும் இருள், தெரியாத முகம் , அறியாத மொழி, புரியாத கலாச்சாரம் என எல்லாமே புதிது.

உணவுக்கு என்ன வழி, தங்க இடத்திற்கு என்ன செய்வது யாரிடம் உதவி கேட்பது என எதுவுமே தெரியாதவர்களாய் முன்பு தன் இனத்து மக்களை தன் வீட்டு மாட்டிலும் கேவலமாக நடத்திய மக்கள் மத்தியில் வாழ்ந்து அனுபவப்படுகின்றார். . யூத மக்களின் அடிமை வீடு என அழைக்கப்பட்ட எகிப்தில் யூத மக்களுக்கு உரிமை வாழ்வை அளிக்க கடவுளால் கொடுக்கப்பட்ட மகன் வருகிறார் . இந்தத் துயர் அன்னையை எவ்வளவு வேதனைக்கு உள்ளாக்கி இருக்கும்

மூன்றாம் வியாகுலம்

இயேசு காணாமல் போதல்

லூக் 2: 43,44

திருவிழாக் காலங்களில் குழந்தைகள் தாய் தந்தையை விட்டுப் பிரிந்து செல்வதும் பின்னர் நீண்ட தேடலுக்குப் பின் பிள்ளைகளைக் கண்டடைந்து மகிழ்ச்சி கொள்வதும் நம் அனுபவத்தை ஒத்தது. இதோ இங்கே ஒவ்வோர் யூதக் குழந்தையும் 12



வயது நடக்கின்ற போது எருசலேம் ஆலயம் சென்று காணிக்கை செலுத்தி மறைநூலை வாசிக்கும் தகுதி பெறுகின்றனர்

இந்த மதச் சடங்கை நிறைவேற்றவே இயேசுவின் பெற்றோர் இயேசுவைக் கோவிலுக்கு அழைத்து வந்தனர். சடங்குகள் முடிந்து வீட்டுக்குச் செல்ல முற்படும்போது இயேசுவைக் காணவில்லை.

"கடவுள் வாக்களித்த திருமகன்
உலகை மீட்க வந்த இரட்சகன்
தூய ஆவியால் பிறந்த திருமகனை"
காணாமல் போக விட்டுவிட்டேனே

என்ற குற்ற உணர்வு ஒரு புறம் , பிள்ளைப் பாசம் மறுபுறமுமாக பிரிந்த மகன் கிடைப்பானா என்ற ஏக்கத்தோடு கண்ணில் படும் குழந்தைகள் அனைத்தும் தன் மகனோ என்ற பிரமை. குழப்பத்தோடு நம் தாய் தன் நிலை மறந்து தவிப்பதைத் தியானித்து எந்த நிலையிலும் இயேசுவை விட்டுப் பிரிந்து போகாமலிருக்க மன்றாடுவோம்

நான்காம் வியாகுலம்

இயேசு சிலுவை சுமந்து செல்லுதல்

லூக் 23:27

இந்தக் கொடூரச் செயலைக் கண்ணுற்ற நம் தாய் எங்கோ, யாருக்கோ கிடைக்க வேண்டிய தண்டனை இன்று தன் ஒரே மகனுக்கு , குற்றமற்றவருக்குக் கிடைத்திருப்பதைக் கண்டு வருத்தம் மேலிட கலங்கி நிற்கிறார் . இது அன்னையின் மனதை உடைத்து நொறுக்குவது போன்ற வேதனையைத் தந்தது.

30 ஆண்டுகளாக கண்ணுக்குள் கண்ணாகப் பொத்திப் பொத்தி வளர்த்த மகன் இந்த மூன்று ஆண்டுப் பணி வாழ்வால், விரோதியாக, வேண்டாதவராக, எதிர்க்கப்பட வேண்டியவராக, ஒழித்துக் கட்டப்பட வேண்டியவராகப் பார்க்கப்படுவதைக் கண்டு குமுறுகிறது அன்னையின் உள்ளம்.

நாதியற்று, நையப் புடைக்கப்பட்டு, உடல் முழுதும் காயங்களோடு தள்ளாடி தூக்க முடியாத பாரச் சிலுவையைத் தூக்கிச் செல்வதைக் கண்டு அன்னை அனுபவித்த துயரைத் தியானிப்போம்

**அருட்சகோதரி**
**ஜெபமணி**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

அன்புடையவராக இருப்பதும், உயர்ந்த குடியில் பிறந்த இலக்கணத்துக்கு உரியவராக இருப்பதும்தான் பண்புடைமை எனக் கூறப்படுகிற சிறந்த நெறியாகும்.

## மழைக் காலநிலையுடன் தலைதூக்கும் டெங்கு!

நாட்டில் மேல் மாகாணம் உள்ளிட்ட பல பிரதேசங்களில் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. அதன் விளைவாக தாழ்நிலங்களிலும் நீர் தேங்கங்கக் கூடிய இடங்களிலும் தண்ணீர் தேங்கியுள்ளது. குறிப்பாக சுற்றாடலில் ஒழுங்குமுறையாக அப்புறப்படுத்தப்படாது குவிந்து காணப்படும் நீர் தேங்கக்கூடிய திண்மக்கழிவுப் பொருட்களிலும் தெளிந்தநீர் தேங்கி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

அதேநேரம் கடும் வரட்சிக் காலநிலையைத் தொடர்ந்து மழைக் காலநிலை ஆரம்பித்துள்ளதோடு, நுளம்புகளின் பெருக்கத்திலும் அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலைமை குறித்து தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு விஷேட கவனம் செலுத்தியுள்ளது.

ஏனெனில் மழையுடன் கூடிய காலநிலையுடன் சேர்த்து நுளம்புகள் பல்கிப் பெருகுவதும், டெங்கு வைரஸ் காய்ச்சல் தீவிரமடைவதும் அண்மைக் காலமாக வழக்கமாகியுள்ளது.

டெங்கானது ஒரு வைரஸ் நுண்ணுயிர் ஆகும். இந்நுண்ணுயிரை நுளம்பில் காணப்படும் ஒரு வகை இனமே காவிப்பரப்பும் பண்பைக் கொண்டிருக்கின்றது. அதுதான் ஈடிஸ் எஜிப்டைய் இன நுளம்புகளாகும். இவ்வின நுளம்புகள் பெரும்பாலும் மழையுடன் சேர்த்து பல்கிப் பெருகக் கூடியன.

அதாவது டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் இந்நுளம்புகள் மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீரில் முட்டையிட்டு பல்கிப் பெருகும் பண்பைக் கொண்டுள்ளன. அதன் காரணத்தினால் தற்போதைய மழைக் காலநிலையும் மழை நீர் தேங்குவதற்கு சாதமாக சுற்றாடலில் காணப்படும் திண்மக் கழிவுப்பொருட்களும் இவற்றின் பெருக்கத்திற்கு துணைபோகக் கூடியனவாக காணப்படுகின்றன. அதனால்தான் நுளம்புகள் பெருகுவதற்கு சாதமான முறையில் சுற்றாடலை வைத்திருக்க வேண்டாம் என சுகாதாரத் தரப்பினர் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அவர்களது கோரிக்கைப்படி வீட்டையும் சுற்றாடலையும் மழைநீர் உள்ளிட்ட தெளிந்த நீர் தேங்க முடியாதபடி சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்திருக்க வேண்டும். குறிப்பாக சுற்றாடலில் காணப்படும் கைவிடப்பட்ட சிரட்டைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன், உடைந்த மட்பாண்டங்கள் உள்ளிட்ட மழைநீர் தேங்கக்கூடிய அனைத்து திண்மக் கழிவுப்பொருட்களையும் முறையாகவும் சீராகவும் அப்புறப்படுத்துவது இன்றியமையாததாகும். அத்தோடு நீர் தேங்க முடியாத வகையில் சுற்றாடலை உலர்நிலையில் வைத்திருப்பதிலும் கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்க வாய்ப்பு இராது.

இது இவ்வின நுளம்புகள் முட்டையிட்டு பல்கிப் பெருகுவதற்கான வாய்ப்பை முழுமையாகத் தவிர்த்து விடும். இவ்விதமான நடவடிக்கைகளின் மூலம் டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவ்வின நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் போது இவ்வைரஸின் தாக்கமும் பாதிப்புக்களும் கட்டுப்பாட்டு நிலையை அடைந்து விடும். அதாவது டெங்கு வைரஸைக் காவிப் பரப்பும் செயலை ஈடிஸ் எஜிப்டைய் இன நுளம்புகள்தான் மேற்கொள்ளும். இவ்வின நுளம்புகள் இல்லாத பட்சத்தில் இவ்வைரஸின் தாக்கமும் அச்சுறுத்தலும் கட்டுப்பாட்டு நிலையை அடைந்துவிடும். ஏனெனில் இந்த இன நுளம்புகளைத் தவிர வேறு மார்க்கங்களால் பரவக்கூடியதல்ல டெங்கு வைரஸ். அதற்கான சாத்தியமும் இல்லை. அதுவே மருத்துவர்களின் கருத்தாகும்.

அதனால் தெளிந்த நீரில் முட்டையிட்டு பல்கிப் பெருகும் ஈடிஸ் எஜிப்டைய் இன நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான ஒரே வழி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருப்பதேயாகும்.

தற்போதைய சூழலில் கடும் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளுடன் எவருக்காது நோய் நிலை காணப்படுமாயின் கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக் கூடாது. ஆரம்ப கட்டத்திலேயே தகுதியான வைத்தியரை அணுகி உரிய மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் ஊடாக நோயை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளலாம். ஆனாலும் மழைக் காலநிலையுடன் ஈடிஸ் எஜிப்டைய் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டால் டெங்கு வைரஸ் காய்ச்சல் என்ற அச்சுறுத்தலையே எதிர்கொள்ள நேரிடாது. அதுவே இப்போதைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி உடைந்தது!

அ.தி.மு.க கூட்டணியில் பா.ஜ.க இல்லை; கட்சியின் முடிவைத்தான் நான் அறிவிக்கிறேன் என அக்கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார் நேற்று திடீரென்று அறிவித்தார்.

பேரறிஞர் அண்ணா குறித்து தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தெரிவித்த விமர்சனம் காரணமாக அ.தி.மு.க_ பா.ஜ.க இடையே மோதல் நீடித்து வருகிறது.

இந்த மோதலின் தொடர்ச்சியாக சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அ.தி.மு.க மூத்த தலைவரான முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், "அ.தி.முக கூட்டணியில் பா.ஜ.க இல்லை. எங்கள் கட்சியின் முடிவைத் தான் நான் அறிவிக்கிறேன். ஆரம்பத்தில் ஜெயலலிதாவை விமர்சித்து வந்தார் அண்ணமாலை.



பின்னர் அதற்கு மன்னிப்பு கேட்ட நிலையில் இப்போது அண்ணாவை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்" என்றார்.

சமீபத்தில் அறிஞர் அண்ணாவைப் பற்றி தவறான கருத்தை அண்ணாமலை வெளிப்படுத்தியதையடுத்து, தமிழக பா.ஜ.கவினர் உச்சக்கட்ட அதிருப்தியில் உள்ளார்கள். அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் சி.வி.சண்முகம், ஜெயக்குமார், செல்லூர் ராஜூ தொடங்கி அ.தி.மு.க மூத்த தலைவர்கள் பலரும் அண்ணாமலைக்கு எதிராகவும் பா.ஜ.கவுக்கு எதிராகவும் கடுமையாக செயற்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது கருத்தினை வாபஸ் பெறாமல் விளக்கமளிக்கிறேன் என்பதன் பேரில் அண்ணாமலை மீண்டும் சீண்டியிருக்கிறார். இதனால் எடப்பாடி பழனிச்சாமி கோபமடைந்துள்ளார்.

அமித்ஷா_ எடப்பாடி சந்திப்பு அண்மையில் நடந்து கொண்டிருந்த நிலையில், அண்ணாவைப் பற்றி அண்ணாமலை சீண்டிய சம்வத்தை எடப்பாடியின் கவனத்துக்கு ஜெயக்குமார் கொண்டு சென்றுள்ளார்.

# மாணவர்களுக்கு உதவிகளை வழங்கும் 'இணைந்த கரங்கள்'

'ஏழ்மையை ஒழிப்போம், கல்வியை விதைப்போம்' என்ற மகுட வாசகத்தின் கீழ், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவச் செல்வங்களது கல்விச்செயற்பாடுகளுக்கு கைகொடுக்கும் திட்டங்களை 'இணைந்த கரங்கள்' அமைப்பு செயற்படுத்தி வருகின்றது.

மாணவர்கள் கல்வியை இடைநடுவே கைவிடுகின்ற அவல நிலையை ஒழிப்பதற்கும் 'இணைந்த கரங்கள்' அமைப்பு பாடுபட்டு வருகின்றது. நாடு முழுவதும் பரந்துபட்ட அளவில் செயற்பட்டு வருகின்ற 'இணைந்த கரங்கள்' அமைப்பானது, இம்முறை பதுளை மாவட்டம், ஸ்பிரிங்வெளியில் அமைந்துள்ள ஊவா/பது/மேமலை தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு தனது உதவிக்கரங்களை நீட்டியுள்ளது.

ஏறத்தாழ 150 இற்கும் மேற்பட்ட இம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வானது, பாடசாலை அதிபர் எஸ். திருச்செல்வம் தலைமையிலும், இணைந்த கரங்கள் உறுப்பினர்களான சி. காந்தன், எல்.கஜரூபன், எம். ஜெகனாதன், திருமதி எல். சங்கீதா, திருமதி. ஏ.பங்கயற்செல்வி ஆகியோரது ஒருங்கிணைப்புடனும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது.







இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டிருந்ததுடன், இம்மகத்தான சேவையை முன்னெடுக்கும் இணைந்த கரங்கள் உறவுகளுக்கு பாடசாலை அதிபரால் நன்றிகளும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டன.

# உயர்நீதிமன்ற நீதியரசருக்கும் ஓய்வுபெற்ற நீதிபதிக்கும் கௌரவம் வழங்கும் விழா

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏட்பாட்டில் உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.திலீப் நவாஸ் மற்றும் மேல்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் கடந்த அண்மையில் நடைபெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.றெளசுல் ஹாதி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதி ஜெ.றொட்ஸ்கி, நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.சம்சுடீன், அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா, பொத்துவில் மாவட்ட நீதிபதி ஏ.சீ. றிஸ்வான், சம்மாந்துறை நீதிமன்ற நீதிபதி ரீ.கருணாகரன் ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

மாவட்ட, நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், பள்ளிவாசல் பரிபாலனசபைத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எம்.ஏ. திலீப் நவாஸ், மேல்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் ஆகியோருக்கு வருகை தந்திருந்த அதிதிகள் புடைசூழ அக்கரைப்பற்று சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் எம்.எம்.பஹீஜ்,







பொருளாளர் மு.பாத்திமா றிஸாமா, உதவிச் செயலாளர் என்.தமிழினியன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கினர். கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை நீதிமன்றங்களின் சட்டத்தரணிகள் சங்கம் சார்பாக அதன் தலைவர்களினால் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**_எம். எப். றிபாஸ்**
(பாலமுனை தினகரன் நிருபர்)

# பாணந்துறை பிரதேசத்தில் பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு

பாணந்துறை பிரதேச தமிழ்மொழிமூல பாடசாலைகளிலிருந்து அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் பாணந்துறை கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

பாணந்துறை செரன்டிப் கிரான்ட் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற பல்கலைக்கழகம் தெரிவான 2021 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இந்நிகழ்வில் 31 மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். பிரதம அதிதியாக முன்னாள் ஆசிரியை ரஸானா ஹஜ்ஜுல் அக்பர் கலந்து கொண்டார். பல்வகை சமூக செயல்பாட்டாளராக வழங்கிய பங்களிப்புக்காக அவர் விஷேட நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்ட ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்னாள் தலைவர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் சிறப்புரை நிகழ்த்தினார். கௌரவ அதிதிகளாக பிராந்திய பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். அவர்கள் நினைவுச் சின்னங்களையும் வழங்கி வைத்தனர்.

ஸ்ரீலங்கா ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் பாணந்துறை கிளையின் கல்வி மற்றும் உயர் கல்வி ஊக்குவிப்பு வேலைத் திட்டத்தின் பிரகாரம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாணந்துறை கோட்டக் கல்விப் பிரிவின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுடன் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பிலியந்தலை கோட்ட மட்ட பாடசாலைகளிலிருந்தும் குறிப்பிட்ட ஆண்டில் பல்கலைக்கழகம் பிரவேசித்த மாணவர்கள் கலந்துகொண்டர்.







பாணந்துறை மற்றும் பிலியந்தல கோட்டக் கல்விப் பிரிவின் பல்கலைக்கழகம் தெரிவான ஜீலான் தேசிய பாடசாலை 16, அல்பஹ்ரியா தேசிய பாடசாலை09, அலவிய்யா முஸ்லிம் வித்தியாலயம்02, அறபாத் முஸ்லிம் வித்தியாலயம்04 என 31 மாணவர்கள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# இலங்கை பைத்துல் மால் நிதியத்தின் மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தெரிவு

பைத்துல் மால் நிதியத்தின் 66 ஆவது வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

நிதியத்தின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம்.இல்யாஸ், உபதலைவர் எம்.எஸ். பௌசுல் ஹக், செயலாளர் ஏ.என். நஸ்வி ரஹ்மான், பொருளாளர் ஏ. பெரோஸ் மூன், உதவிச் செயலாளர் எப்.எம். அஸாப் கான்.

செயற்குழு உறுப்பினர்களாக எஸ்.ஆர். ரழீம், எம்.ஏ.எம்.நஸ்ரின், ஏ. பஸால் இஸ்ஸடீன், எம். றுஸ்தி தஹ்லான், எப். ஐ. அன்வர், டொக்டர் எம்.ஏ. ஸெய்னுடீன், எம். எச்.எம் .நஸார், முகைதீன் காதர், சர்ஹான் மூஷீன் , மிஃராஜ் டீ சாலி, சுரைஸா ஹாஷிம், றுமைஸ் முஹைதீன், இஷாக் ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

57 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முதலாவது முஸ்லிம் சபாநாயகரான எச். எஸ். இஸ்மாயிலின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட ஓர் அமைப்பே பைத்துல் மால் நிதியமாகும்.

பைத்துல் மால் நிதியம் கல்வி, தொழில் முயற்சி, பொதுநிவாரணம் ஆகிய துறைகளிலும் உதவிகளை வழங்கி வருகின்றது.



பைத்துல் மால் நிதியம் அதன் வரவுசெலவுத் திட்டத்தில் கூடுதலான கவனத்தை வறிய மற்றும் தேவைப்பட்டோரது க.பொ.த. உயர்தரம் மற்றும் பல்கலைக்கழக கல்வியைத் தொடர்வதற்கு புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றது. இத் திட்டத்தின் கீழ் வருடாந்தம் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றவர்களின் பொருளாதாரக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதிலும் முக்கிய பங்கினை வகிக்கின்ற பைதுல்மால் நிறுவனம், அதன் கிராமப்புற மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்களினூடாக பல பாரிய சமூக நலத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

பிரதேசத்திலுள்ள ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அடிப்படை வசதிகளற்ற மக்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றது. வருமானம் ஈட்டலுடன் தொடர்புபட்ட சுயதொழில் முயற்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது முக்கியமான ஓர் இலக்காக இருப்பதுடன், பயனாளிகளின் சுதந்திரமான வாழ்க்கைக்கும் உத்தரவாதம் வழங்குகின்றது.

நாடளாவிய ரீதியில் ஏழைகள் மற்றும் தேவைப்படுபவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், அவர்களுக்கு வாழ்வாதாரத்தைப் பெறுவதற்கும் தேவையான கருவிகளை வழங்குவதும் பைதுல்மால் நிறுவனத்தின் முக்கிய பணியாக உள்ளது.

பைத்துல் மால் நிதியம் கிராமங்களில் நீர்த்தேவைகளை நிறைவேற்றுவதற்காக குழாய்க் கிணறுகளையும் நிர்மாணித்து வருகின்றது.

விதவைகள், ஆதரவற்றோருக்கும் மற்றும் மருத்துவத் தேவையுடையோருக்கும் மாதாந்தம் நிதி உதவிகளை வழங்கி வருகின்றது.

பைத்துல் மால் நிதியத்தின் இந்தப் பணிகளில் பங்குபற்ற விரும்பும் ஆர்வம் உள்ளவர்கள் நிதியத்தின் செயலாளருடன் 0777630923 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நிதியத்தின் செயலாளர் நஸ்வி ரஹ்மான் கேட்டுள்ளார். **(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

# சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயத்தில் சர்வதேச ஓசோன் தினம் அனுஷ்டிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**



யாழ்.சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயத்தில் ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் நேற்று (18) அனுஷ்டிக்கப்பட்டது.

கல்வி அமைச்சின் வழிகாட்டலுக்கமைவாக சுதுமலை சிம்மிய பாரதி வித்தியாலயத்தில் எதிர்காலத்துக்கான சுற்றுச் சூழல் கழக அனுசரணையுடன் ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் துரைரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவர் மத்தியில் ஓசோன் படலத்தை பாதுகாத்தல் எனும் தொனிப் பொருளில் பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டு அதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.நாகமுத்து பிரதீபராஜா பிரதம விருந்தினராகவும், யாழ். வலிகாமம் கல்வி வலய சுற்றாடல் முன்னோடி வலய ஆணையாளர் ப.அருந்தவம், எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் கழக தலைவர் மற்றும் செயலாளர்களாகிய லி.கேதீஸ்வரன், ம.சசிகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.



ஊரெழு கணேச வித்தியாசாலையில் ரூ.பத்து இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட கரப்பந்தாட்ட ஆடுகள திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

# கவனயீர்ப்பு போராட்டம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் நாளை புதன்கிழமை மற்றும் மறுநாள் வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் வி. தர்சன் அறிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடு, வைத்தியர்கள் வெளியேற்றம் என்பன சுகாதார கட்டமைப்பை வெகுவாக பாதிக்கும். அதனை தடுக்க அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியே இரு தினங்களும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# தாராபுரம் பாடசாலையில் புதிய அதிபர் நியமனம் பெற்றோர் எதிர்ப்பு கவனயீர்ப்பு போராட்டம்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் தாராபுரம் அல்மினா மகா வித்தியாலயத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோர் அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிய அதிபர் நேற்றையத் தினம் (18) தனது பணி பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இந்நிலையில் 'புதிய அதிபர் தங்கள் பாடசாலைக்கு பொருத்தமானவர் அல்ல' என தெரிவித்து பெற்றோர் நேற்று காலை சில மணிநேரம் பாடசாலைக்கு முன்பாக பதாகைகள் ஏந்திய வண்ணம் அமைதி போராட்டத்தில் ஈடுபட்டனர். 'வராதே வராதே பெற்றோர்கள் வெறுக்கும் அதிபரே வராதே', 'ஏழை மாணவர்களின் கல்வியை அழிக்காதே' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் பெற்றோர் கருத்து தெரிவிக்கையில், கடந்த பத்து வருடங்களாக பாடசாலை கல்வி மிகவும் பின்தங்கி காணப்படுகின்றது.

இதற்கு காரணம் சரியான தலைமைத்துவம் கொண்ட அதிபரோ அல்லது பிரதி அதிபரோ இப்பாடசாலைக்கு நியமிக்கப்படாமையாகும்.

இதன்காரணமாக இங்கு நன்றாக படிக்கும் பிள்ளைகள் இப்பாடசாலையை விட்டு விலகி மன்னார் நகருக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.

# யாழில் யுவதி வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசிய சம்பவம்; காதலன் உள்ளிட்ட மூவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணத்தில் யுவதியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசிய குற்றச்சாட்டில் காதலன் உள்ளிட்ட மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாவடியில் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை இனந் தெரியாத கும்பலொன்று வந்து பெற்றோல் குண்டு வீசியதுடன் , வீட்டையும் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டி மீதும் தாக்குதல் மேற்கொண்டு சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர் , அதுமட்டுமின்றி வீட்டிலிருந்தவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பி சென்றிருந்தனர்.

தாக்குதலில் வீட்டில் இருந்த யுவதி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் ஐவர் காயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காதல் விவகாரம் காரணமாகவே தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்கின்றனர். உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் இச்சம்பவத்தில் தொடர்புபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து யுவதியை காதலித்ததாக கூறப்படும் இளைஞன் உள்ளிட்ட மூவரை நேற்றைய தினம் மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இரு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களையும் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## மலைச்சாரல்

# மலையகத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்



மலையகத்தின் கடந்த சில தினங்களாக உருளைக் கிழங்கு அறுவடை இடம் பெறுவதால் உள்ளூரில் விளையும் உருளைக் கிழங்குகளுக்கு தகுந்த விலை வழங்குமாறு கோரி நேற்று முன்தினம் (17) விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பதாகைகளை ஏந்தியவாறு விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குகளால் உள்நாட்டு விவசாயம் பாதிக்கப்படுவதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இங்கு விளைகின்ற உருளைக் கிழங்குகளுக்கு தகுந்த விலை கிடைப்பதில்லையெனவும் இதனால் கடனை கூடசெலுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 140 ரூபாவுக்கே கொள்வனவு செய்யப்படுவதாகவும் விவசாயிகள் இதன்போது தெரிவித்தனர். எனவே எமது விளை பொருளுக்கு தகுந்த விலையை தருமாறு கோரியும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கை உடன் நிறுத்துமாறு கோரியே விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மலையக மக்கள் முன்னணி நிர்வாக கட்டமைப்பில் மாற்றம்



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மலையக மக்கள் முன்னணி மற்றும் அதன் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணி என்பவற்றில் முதற்கட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன்படி புதிய நிர்வாக மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஹற்றன் கட்சி தலைமை காரியாலயத்தில் நிர்வாக உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்நிலையில் கட்சியின் கவுன்சில் உறுப்பினர்களாக ஆர். ராஜாராம், கண்மணி சிவனேசன்,ஆனந்தன், தாளமுத்து சுதாகரன்,க.சிவஞானம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

தொடர்ந்து மலையக மக்கள் முன்னணியின் தலைவராக கலாநிதி வே.இராதாகிருஸ்ணனும் செயலாளர் நாயகம் பேராசிரியர் எஸ். விஜயசந்திரன்,பிரதிதலைவராக முன்னாள் மத்தியமாகாண சபை உறுப்பினர் ஆர். ராஜாராம்,தேசிய அமைப்பாளர் ந.பாலமுரளி,நிதிச்செயலாளர் பி.கிருஸ்ணன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இதேவேளை மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியிலும் பதவி மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன அந்தவகையில் தலைவராக கலாநிதி வே.இராதாகிருஸ்ணன், பதில் செயலாளராக புஸ்பா விஸ்வநாதன்,நிதிச்செயலாளராக தாளமுத்து சுதாகரன், அமைப்பு செயலாளராக எஸ். ஜெயக்குமார்,பிரதி பொதுச்செயலாளராக க.சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மலையக மக்கள் முன்னணியின் இளைஞரணி தலைவராக லெட்சுமனார் சஞ்சய், செயலாளராக கதிர்காமத்தம்பி சுரேன்,இணைப்பாளராக கலைக்குமார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகளிர் அணி தலைவியாக சுவர்ணலதா இலங்கேஸ்வரன்,செயலாளராக கிருஷ்ணவேணி,பிரதி தலைவியாக கலா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு பத்மநாதன் மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

இவ்வாறு புதிய உறுப்பினர்கள் மலையக மக்கள் முன்னணி மற்றும் தொழிற்சங்க பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வளவு காலம் கட்சியில் காணப்பட்ட பிணக்குகள் தீர்க்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வரும் காலங்களில் மலையகத்தில் மலையக மக்கள் முன்னணி மக்களோடு மக்களாக இருந்ததை விட மேலும் ஒரு படி முன்னோக்கி செல்லும். எந்நேரமும் மக்களுக்காக மலையக மக்கள் முன்னணியின் கதவு திறந்திருக்குமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



பதுளை ஹாலி எல நகர அருள்மிகு வீரசக்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் கொடியேற்ற திருவிழாவில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டார்.

# ஆன்மிகம் சார்ந்த விடயங்களில் அரசியல் செய்வதற்கு முற்படக்கூடாது

## எம்.ராமேஷ்வரன் எம்.பி

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



" ஆன்மீகம் சார்ந்த விடயங்களில் அரசியல் செய்வதற்கு முற்படக்கூடாது. அரசியல் என்பது மக்களுக்கான சேவை. அந்த சேவையை முறையாக வழங்க அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும்." என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைவாக நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பொகவந்தலாவ லெட்சுமி தோட்ட மத்திய பிரிவு, கெம்பியன் மேற்பிரிவு மற்றும் கெம்பியன் 57 ஆகிய பிரதேசங்களில் உள்ள ஆலயங்களுக்கான காசோலைகள், ஒலி பெருக்கி, மின்பிறபாக்கி மற்றும் கலசங்கள் என்பன வழங்கும் நிகழ்வு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அம்பகமுவ பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது, அந்த ஊரிலுள்ள இளைஞர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஊடாகவே நிதி ஒதுக்கீட்டை கையளிப்பதற்கு ரமேஷ்வரன் மேற்கொண்டநடவடிக்கையைஊர்மக்கள் பாராட்டினார்கள்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

"மலையக அரசியல் கலாசாரம் மாற வேண்டும் என்ற உயரிய பண்புடனேயே எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் செயற்பட்டுவருகின்றார். அதற்காக பல விட்டுக்கொடுப்புகளை செய்கின்றார். இதனை எமது பலவீனமாக கருத வேண்டாம், மக்களுக்காகவே அதனையும் செய்கின்றோம். ஏனெனில் எமது மலையக இளைஞர்களும் இன்று மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்.

ஆன்மீக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற முக்கிய சமூகத்தின் அங்கீகாரத்தை பெற்ற இடங்களில் ஒருபோதும் அரசியல் நடத்தக்கூடாது. அவ்வாறான இடங்களில் இணைந்து செயற்பட்டு சிறந்த முன்னுதாரணத்தை சமூகத்துக்கு அடுத்த தலைமுறைக்கு வழங்குவதற்கு அரசியல் தரப்புகள் முன்வர வேண்டும்." என்றார்.

# மாணவிகளுக்கு ஆபாச காணொளிகளை காண்பித்த ஆசிரியர் கைது

ஓபநாயக்க பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் மாணவிகளுக்கு ஆபாச காணொளிகளை காட்டிய குற்றச்சாட்டில் ஆசிரியரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவிகளிடமே ஆசிரியர் இவ்வாறு நடந்துகொண்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசியில் ஆபாசமான காணொளிகளை காண்பித்த சம்பவம் தொடர்பில் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஓபநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் பல மாணவிகளிடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு ஆபாச காட்சிகளை காண்பித்துள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

சந்தேத்தின் பேரில் ஆசிரியரை கைத்தொலைபேசியுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# புதிய மதுபானசாலைக்கு பொதுமக்கள் எதிர்ப்பு

**கினிகத்தேன நிருபர்**

குயில்வத்தை பகுதியில் புதிய மதுபானசாலையொன்று அமைக்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிய மதுபானசாலை அமைக்கப்படவுள்ள பகுதியில் பாடசாலை, ஆலயம் போன்றவை காணப்படுவதுடன், பொதுமக்களின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாக பிரதேசமக்கள் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்



# போஷாக்குள்ள மாணவ சமூகத்தை உருவாக்க காலை உணவு கட்டாயம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி றிபாஸ் தெரிவிப்பு

*பாலமுனை விசேட நிருபர்*

காலை உணவை கட்டாயமாக உட்கொண்டே மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக போஷாக்கான உணவுகளையே உண்ணப் பழகிக்கொள்ள வேண்டுமென கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது மழ்ஹறுஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை (18) இடம்பெற்ற காலை ஆராதனை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கையானதும், போஷாக்கானதுமான உணவுகளை கைவிட்டு, பொருத்தமற்ற உணவுகளையே நாம் உண்ணத்தொடங்கியுள்ளோம்.



இப்போது பெண்கள் வீடுகளில் சமைப்பதனை குறைத்து வருகின்றனர். தொழில் செய்யக்கூடிய பெண்கள் அதனை சிரமம் என்று கருதுகின்றனர். எனினும் ஒரு வீட்டின் ஆரம்பம் சமையலறைதான். குறிப்பாக பெண்கள் சமையலை ஒரு அடிமைத்தனமாக நினைக்கக்கூடாது சமையல்தான், ஒரு வீட்டின் மிக முக்கியமான விடயமாகும்.

கல்வியைப் பொறுத்த வரையில் நமக்கு தெரிந்த விடயத்தை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

அப்போதுதான், எமது அறிவு விருத்தியடையும். எமக்கு தெரிந்த விடயங்களை இரகசியமாக பேணிக்கொள்ளாது ஏனையவர்களுக்கும் கற்றுக்கொடுக்க மாணவர்கள் பழகிக்கொள்ள வேண்டும் என்றார்.

கல்வி பொதுத்தராதர உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகள், வலய மட்ட தமிழ் தினப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகள் மற்றும் கோட்ட மட்ட சிறுவர் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்று வலயமட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் எம்.சீ.என். றிப்கா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதி அதிபர்களான எஸ்.முபாரக், எம்.எப்.ஐ.மர்சூனா உள்ளிட்ட ஆசிரியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# உலக நோயாளர் பாதுகாப்பு தினம் களுவாஞ்சிகுடியில் அனுஷ்டிப்பு



*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தையிட்டு 09,17 களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில், நடைபவனி இடம்பெற்றது. இதில், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையிலிருந்து ஆரம்பமான இந்நடை பவனி, பட்டிருப்பு வீதியூடாகச் சென்று எருவில் கிராமத்தினூடாக மீண்டும் வைத்தியசாலையை வந்தடைந்தது.

உலக சுகாதார ஸ்தாபனம் வருடாந்தம் 09, 17 ஐ, நோயாளர் பாதுகாப்பு தினமாக அனுஷ்டித்து வருகிறது. இந்நிலையில் இவ்வருடத்தின் கருப்பொருளாக நோயாளர் பாதுகாப்புக்காக நோயாளரை ஈடுபடுத்தல் மற்றும் நோயாளரின் குரலை உயர்த்துவோம் ஆகிய தொனிப்பொருளின் அனுஸ்டிக்கிறது.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் க.புவனேந்திரநாதன், தலைமையில் இடம்பெற்ற இந்நடைபவனியில், வைத்தியசாலையில் கடமை யாற்றும் வைத்தியர்கள், தாதியர் உத்தியோகஸ்த்தர்கள், உள்ளிட்ட ஏனை சக உத்தியோகஸ்த்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆதார வைத்தியசாலைக்கு சிறப்பு விருதுகள்



தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு தர மதிப்பீடுகளில், மிகச் சிறப்பான செயற்றிறனுக்கான அங்கீகார விருதும் மற்றும் நோயாளி பாதுகாப்பு தீவிர சிகிச்சை பிரிவு (ICU) க்கான சிறப்பு சான்றிதழ்களும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளது.சுகாதார அமைச்சினால் உலக நோயாளி பாதுகாப்பு தினத்தையொட்டி (2023) "நோயாளிகளின் பாதுகாப்பிற்காக நோயாளிகளை ஈடுபடுத்துதல் " எனும் தொனிப்பொருளில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன தலைமையில், பண்டாரநாயகக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (16) நடைபெற்ற நிகழ்வில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீஆர் .றஜாபிற்கு இவ்விருது வழங்கப்பட்டது.

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

# சனல்-04 காணொளி: விசாரிப்பதற்கு குழு நியமிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது

## காத்தான் குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் சம்மேளனம்

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்த

ஆணைக்குழுவை நியமித்தமைக்கு, காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்

ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக (17) ஞாயிற்றுக்கிழமை காத்தான்குடி பள்ளிவா சல்கள் முஸ்லிம் நிறுவனம் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் சம்மேளன செயலாளர் ஏ..எல்.எம். சபீல் நழீமி தெரிவித்தார்.

இவ்வூடகவியலாளர் சந்திப்பில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளளத்தின் தலைவர் ரஊப் ஏ மஜீத் உட்பட சம்மேளன உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது தொடர்;ந்து கருத்து தெரிவித்த சம்மேளன செயலாளர் ஏ..எல்.எம். சபீல் நழீமி:



சனல் 4 வில்,அஸாத் மௌலானா தெரிவித்துள்ள கருத்துக்கள் பாரதூரமானவை. இதைக் கருத்திலே கொண்ட ஜனாதிபதி

இதுபற்றி விசாரிக்க ஓய்வு பெற்ற நீதியரசர் இமாமின் தலைமையில் 3 பேரடங்கிய ஆணைக்குழுவை நியமித்துள்ளார். அதற்காக ஜனாதிபதிக்கு காத்தான்குடி சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் எமது நாடு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டதை நாம் அறிவோம்.

குறிப்பாக அந்த ஈஸ்டர் தாக்குதலிலே ஈடுபட்ட ஒரு சிலர் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் என்பதால், எமது காத்தான்குடி சமூகம் பாரியளவிலே பல்வேறு விடயங்களினாலும் பாதிக்கப்பட்டது.

வியாபர நடவடிக்கைகளை மேற் கொள்ளமுடியாமலிருந்தது. ஏனைய பிரதேசங்களுக்கு காத்தான்குடி முஸ்லிம்கள் செல்கின்றபோது, அவர்களை சந்தேக கண் கொண்டு பார்க்கின்ற நிலைமையும் இருந்தது.

மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் முஸ்லிம்களை சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்ற நிலை காணப்பட்டது. இப்படியான அச்சுறுத்தல்களையும் பல்வேறு வகையான சந்தேகங்களையும் இச்சமூகத்தின் மீது இந்த ஈஸ்டர் தாக்குதல் ஏற்படுத்தியது.எனவே,இதன் உண்மைத் தன்மைகளை கண்டறிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டதை காத்தான்குடி சமூகம் பாராட்டுகிறது.


SRI LANKA CONVENTION BUREAU

**சுற்றுலாத்துறை அமைச்சு**
**இலங்கை மாநாட்டுப் பணியகம் (SLCB)**

**செயல்முறை குத்தகை அடிப்படையில் வாகனமொன்றினை வழங்குவதற்கான கொள்முதல் அறிவிப்பு**

இல.78, காலி வீதி, கொழும்பு 03 இல் அமைந்துள்ள இலங்கை மாநாட்டு பணியகத்திற்கு செயல்முறை குத்தகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை (ஹைப்ரிட் வாகனங்கள்) வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. மனு ஆவணத்தினை எமது உத்தியோகபூர்வ இணையதளத்தில் **www.meetinsrilanka.com** பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரையிடப்பட்ட மனுக்கள் **2023.10.02** ஆம் திகதி **மு.ப.10:00** மணிக்கு திறக்கப்படும். மேலும் அதற்கு மனு ஆவணங்களை இலங்கை மாநாட்டு பணியகத்திடம் ஒப்படைக்கும் போது மீள்ப்பெறமுடியாத வைப்புத்தொகையாக **ரூ.1,000/-** கட்டணமாக செலுத்தப்பட வேண்டும்.

பின்வரும் இலக்கங்களினூடாக மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள **011 48 65 050/51** அல்லது **011 24 40 002**



**விலைமனுக்களுக்கான அழைப்பு**
**கமத்தொழில் திணைக்களம்**

பேராதனை கமத்தொழில் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிறுவனத்திற்குரித்தான அலகுகளுக்காக **"63 பெயர்ப் பலகைகள் மற்றும் 109 அறிவித்தல் பலகைகளை வடிவமைத்து தயாரித்து வழங்குதல்"** எனும் பணிக்காக இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023-09-19ஆம் திகதி முதல் 2023-10-09ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் பி.ப. 2.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 2000.00 ரூபாவைச் செலுத்தியதன் பின் விபரக்குறிப்புகள் அடங்கிய ஆவணங்களை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

02. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை www.doa.gov.lk எனும் இணையதளத்தில் மற்றும் பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023-10-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்தவுடன் அதே இடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விரிவாக்கல் மற்றும் பயிற்சி பிரிவு,**
**கமத்தொழில் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**
**தொலைபேசி இலக்கம்: 081-2389127**


# சாய்ந்தமருதில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

கடலரிப்பைத் தடுப்பதற்காகப் போடப்பட்டுள்ள கருங்கற்களால் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும்,கற்களை அகற்றி இலகுவாகத் தொழிலிலீடுபட வழியேற்படுத்துமாறும் கோரி, சாய்ந்தமருது மீனவர்கள் நேற்று (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சாய்ந்தமருது பெண்கள் சந்தைக்கு அருகில்இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதையடுத்து,சாய்ந்தமருது பொலிஸாரும் கரையோரப் பாதுகாப்புத் தரப்பினரும் உரிய இடத்துக்கு வருகை தந்து மீனவர்களுடன் பேசியதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

கடலரிப்பை தடுப்பதற்காகப் போடப்பட்ட கற்களை விரைவில் அகற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமெனவும் அதிகாரிகள் உறுதியளித்தனர்.

# பைத்துல் மால் நிதியத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு



*எம்.எஸ்.எம்.ஸாகிர்*

பைத்துல் மால் நிதியத்தின் 66 ஆவது வருடாந்த மாநாடு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

நிதியத்தின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம். இல்யாஸ், உப தலைவர் எம்.எஸ். பௌசுல் ஹக், செயலாளர் ஏ.என். நஸ்வி ரஹ்மான், பொருளாளர் ஏ. பெரோஸ் மூன், உதவிச் செயலாளர் எப்.எம். அஸாப் கான், மற்றும் செயற் குழு உறுப்பினர்களாக எஸ்.ஆர். ரழீம், எம்.ஏ.எம்.நஸ்ரின், ஏ. பஸால் இஸ்ஸடீன், எம். றுஸ்தி தஹ்லான், எப். ஐ. அன்வர், டாக்டர் எம்.ஏ. ஸெய்னுடீன், எம்.எச்.எம்.நஸார், முகைதீன் காதர், சர்ஹான் மூஷின், மிஃராஜ் டீசாலி, சுரைஸா ஹாஷிம், றுமைஸ் முஹைதீன், இஷாக் ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். 1957 ஆம் ஆண்டு, முதலாவது முஸ்லிம் சபாநாயகரான எச்.எஸ். இஸ்மாயிலின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட அமைப்பே பைத்துல் மால் நிதியமாகும்.

பைத்துல் மால் நிதியம் கல்வி, தொழில் முயற்சி, பொது நிவாரணம் ஆகிய துறைகளிலும் உதவிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை அபிவிருத்திக் குழுவின் புதிய நிர்வாகிகள் தெரிவு

## செயலாளராக சபூர் ஆதம்

அக்கரைப்பற்று மத்திய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் புதிய செயலாளராக சபூர்ஆதம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இதற்காக நடத்தப்பட்ட வாக்களிப்பில் மாணவர்களின் பெற்றோர்கள் பங்கேற்றிருந்தனர். ஏற்கனவே இரு தடவைகள் வாக்களிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், முதலாவது தடவை குழப்பியடிக்கப்பட்டது.

இரண்டாவது முறை வாக்களிப்பு இடம்பெற்று புதிய நிர்வாகம் தெிவானபோதும்,முறைகேடுகள் நிலவியதாகக் கூறப்பட்டு நிர்வாகம் கலைக்கப்பட்டது.உரிய முறையில் பெற்றோர்களுக்கு அறிவிக்கப்படாமல்,கூட்டப்பட்டதாகக் கூறியே, இத்தெரிவு ரத்துச் செய்யப்பட்டது .மூன்றாவது முறையாக நடத்தப்பட்ட இப்புதிய நிர்வாகத் தெரிவில் கிழக்கின் கேடய அணி சார்பிலும் , தேசிய காங்கிரஸ் அணி சார்பிலும் வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டனர். இதில் 50 வாக்குகளை கிழக்கின் கேடய அணி சார்பானவர்களும் 20 வாக்குகளை தேசிய காங்கிரஸ் சார்பானவர்களும் பெற்றுக் கொண்டனர்.

# உலக தற்கொலை தினத்தையிட்டு கல்முனையில் சிறப்பு நிகழ்வுகள்

*காரைதீவு குறூப் நிருபர்*

உலக தற்கொலை தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில், ஒருவார கால சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

உலக தற்கொலை தினம்கடந்த (11) திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.இதனையொட்டி கல்மு னை ஆதார வைத்தியசாலையில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் தலைமையில்,சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிகழ்வில் உளவியலாளர் திருமதி சம்ருத் ஷெரிப்டின் ( பிரிட்டன்), வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணர் டாக்டர்.ஏஜிஎம். ஜுராச் , வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜே.மதன் மற்றும் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் ,உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தாதிய பொறுப்பு உத்தியோகத்தர். க. அழகரெட்னத்தின் வரவேற்புரையை தொடர்ந்து, வைத்தியசாலை பணிப்பாளர் தலைமை உரை நிகழ்த்தினார்.இதனைத் தொடர்ந்து உளவியலாளரின் தற்கொலை தடுப்பு தொடர்பான விரிவுரை இடம்பெற்றது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவி

உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP) - P163305

# ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

## திட்ட அமுலாக்க ஆதரவு ஆலோசனை உட்பட நிர்மாண மேற்பார்வை, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் பிற செயல்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ஒரு ஆலோசனை நிறுவனத்தை பணியமர்த்துதல (PISC)

**பெறுகை திட்டம் இல: LDSP/PCU/CF/CQS/23/1**

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, (MPAHAPCLG) உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) நிதியுதவியுடன் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தை (LDSP) செயல்படுத்துகிறது. வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாண சபைகள் ஊடாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து 100.84 மில்லியன் அமெரிக்க டொலர் கடனைப் பெற்றுள்ளது. (LDSP செலவுக்கு மில்லியன்) LDSP வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வட-மத்திய மாகாணங்களில் உள்ளூராட்சி அதிகாரங்களை பயனுள்ள மற்றும் பதிலளிக்கக்கூடிய உள்ளூர் சேவை வழங்கல் மற்றும் பொறுப்பான நிர்வாகத்திற்கான வலுப்படுத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. LDSP இந்த மாகாணங்களில் உள்ள அனைத்து 134 உள்ளூராட்சி அதிகாரிகளுக்கும் (LGAs) அடிப்படை இடமாற்றங்கள் (BT) மற்றும் செயல்திறன் இடமாற்றங்களை (PT) வழங்குகிறது. இந்த ஆலோசனையின் மொத்த செலவு 65 மில்லியன் ரூபாயவாகும்.

### 1. ஆலோசனையின் தேவைப்பாடு மற்றும் நோக்கம்:

ஊவா மாகாணங்களில் LDSP இன் கீழ் உள்ள உதவித் திட்டங்களை அடையாளம் காணுதல், செயல்படுத்துதல், மேற்பார்வை செய்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கும் ஆதரவளிப்பதற்கும் ஆலோசனை நிறுவனத்தை ஈடுபடுத்துவதே இந்தப் பணியின் நோக்கமாகும். இந்த துணைத் திட்டங்களில் பொதுவாக பின்வருவன அடங்கும்: சந்தை, நூலகங்கள், பல்நோக்கு சமூக நிலையங்கள், சந்தைகள், பாலர் பாடசாலைகள், பஸ் நிலையங்கள், மருந்தகங்கள் போன்ற பொதுக் கட்டிடங்களின் மறுசீரமைப்பு மற்றும் வெள்ள நீர் வடிகால் பாதைகளை நிர்மாணித்தல் அல்லது புனரமைத்தல், பரவலாக்கப்பட்ட நீர் வழங்கல் வசதிகள், திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டங்களின் நிர்மாணம் போன்றவைகளாகும். இதன் பிரகாரம் ஆலோசகர் சிவில் வேலைகள் மற்றும் பொருட்கள் தொடர்பான பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், ஆனால் அவை மட்டும் அல்ல:

1. LDSP இன் கீழ் செயல்படுத்த தகுதியுடைய சாத்தியமான துணை திட்டங்களை அடையாளம் காண தேவையான உதவிகளை வழங்க வாடிக்கையாளருக்கு உதவுதல்.
2. வடிவமைப்பு, விரிவான மதிப்பீடு, ஒப்பந்தத்தை வழங்கத் தயாராகும் வரை விலைக்கோரல் ஆவணம் தயாரித்தல் போன்ற ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டலை வழங்க வாடிக்கையாளருக்கு உதவுதல்.
3. நிர்மாண நிலையின் போது நிர்மாண மேற்பார்வை, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு சேவைகளை மேற்கொள்வதில் வாடிக்கையாளருக்கு உதவுதல்.
4. தொழில்நுட்பத் தரக் கட்டுப்பாடு, உடல் மற்றும் நிதி முன்னேற்றக் கண்காணிப்பு, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இணக்கம், GRM மற்றும் SAC ஆகியவற்றின் அடிப்படையில் துணைத் திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டைச் செய்ய வாடிக்கையாளருக்கு உதவுதல்.
5. ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி அனைத்து அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களுடன் அனைத்து வசதிகளையும் அந்தந்த உள்ளூர் அரசாங்க அதிகாரிகளிடம் (LGAs) ஒப்படைக்க வாடிக்கையாளர்களுக்கு உதவுதல்.

**குறிப்பு** விதிமுறைகளுக்கு (TOR) mpclg.gov.lk-> Downloads ->Notices & Circulars->Notices இணையதளத்தைப் பார்க்கவும்.

### 2. ஆலோசகரின் தகுதி மற்றும் அனுபவம்

ஆலோசகர் ஒரு தேசிய அனுபவம் வாய்ந்த ஆலோசகர் நிறுவனமாக இருக்க வேண்டும், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் தொடர்புடைய மற்றும் பொருந்தக்கூடிய தொழில்நுட்ப, செயல்பாட்டு மற்றும் நிர்வாக அனுபவத்துடன் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் LKR 50.00 மில்லியனுக்கும் மேற்பட்ட ஒரு பணி அனுபவம் மற்றும் ஒரு (1) வருடத்திற்கு மேற்பட்ட பணிக்காலம்.

ஆலோசகர் அனைத்து ஒப்பந்தங்களின் மேற்பார்வை மற்றும் நிர்வாகத்தில் உதவுவதோடு, இந்த பணியின் காலப்பகுதியில் திட்டத்தின் கீழ் அந்தந்த ஒப்பந்தங்களுக்கு ''பொறியியலாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக" செயல்படுவார். பங்குதாரரின் தன்மை (கூட்டு முயற்சி அல்லது துணை ஆலோசனை போன்றவை) மற்றும் பங்குதாரரின் தகுதி மற்றும் அனுபவத்தைக் குறிப்பிடவும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை நிறுவனங்கள் LDSP மீது எந்த வணிக ஆர்வமும் கொண்டிருக்கக்கூடாது.

### 3. குறும் பட்டியல் அளவுகோல்கள்:

i) சேவைகளின் நோக்கம்: தொழில்நுட்பம், செயல்பாட்டு மற்றும் நிர்வாக அனுபவம் - ஆண்டுகளின் எண்ணிக்கை.

ii) PISC I மேற்கொள்வதற்கான கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள் உட்பட திறன்கள் மற்றும் திறன்கள்: நிபுணர்களின் இருப்பு - எண்கள்.

iii) PISC ஐ செயல்படுத்துவதில் இதே போன்ற அனுபவம் - திட்டங்களின் எண்ணிக்கை.

iv) தொடர்புடைய துறையில் பங்குதாரர் நிறுவனத்தின் அனுபவம் - திட்டங்களின் எண்ணிக்கை

(ஆலோசனை நிறுவனம் மற்றும் நிபுணர்கள் குழு அவர்களின் ஆய்வு மற்றும் தொழில்சார் தகைமைகள், இயைபுடைய அனுபவம், வாடிக்கையாளர்களின் குறிப்புகள் என்பவற்றுக்கான குறிப்பு விதிமுறையில் (ToR) இல் கொடுக்கப்பட்டுள்ள தேவையை பூர்த்தி செய்ய ஆதார ஆவணங்களைச் சமாப்பித்தல் வேண்டும்)

### 4. ஆர்வ முரண்பாடு

வளமுள்ள ஆலோசகர்கள், 2017 நவம்பர் மாதம் திருத்தப்பட்ட 2016 ஜுலை மாதத்தின் முதலீட்டுத் திட்ட நிதியளிப்பு (IPF) கடன் வாங்குபவர்களுக்கான உலக வங்கியின் பெறுகை விதிமுறைகளைப் பார்க்கவும் மற்றும் பின்பற்றவும் வேண்டும்.

### 5. ஆர்வத்தை சமர்ப்பிப்பதற்கான அழைப்பு

தலைவர், அமைச்சு ஆலோசகர்கள் பெறுகைக் குழு (CPCM) இப்போது தகுதி வாய்ந்த தகுதியான ஆலோசனை நிறுவனங்களை சேவையை வழங்குவதற்கு தங்கள் ஆர்வத்தை வழங்க அழைக்கிறது.

ஆர்வமுள்ள ஆலோசகர்கள் குறிப்பு விதிமுறையில் (TOR) குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளைச் செய்யத் தகுதி பெற்றவர்கள் என்பதைக் குறிக்கும் வகையில் அவர்களின் ஆர்வ வெளிப்பாட்டை (EOI) வழங்க வேண்டும் மேலும் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை கீழே உள்ள தொடர்பு விவரங்களிலிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### 6. தேர்வு முறை

ஆலோசகர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி ஒரு ஆலோசகர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

**முறை:** ஆலோசகர்களின் தகுதிகள் (CQS) அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

### 7. சமர்ப்பிப்பு விவரங்கள்

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஆர்வ வெளிப்பாடுகளை ஒரு (1) மூலப்பிரதி மற்றும் இரண்டு (2) பிரதிகளை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையின் இட்டு பதிவு அஞ்சல் அல்லது கூரியர் சேவை மூலம் கீழே உள்ள முகவரிக்கு 2023 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திட்ட அமுலாக்க ஆதரவு ஆலோசனை உட்பட நிர்மாண மேற்பார்வை, ஒப்பந்த முகாமைத்துவம் மற்றும் பிற செயல்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ஒரு ஆலோசனை நிறுவனத்தை பணியமர்த்துதல் (PISC)" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

### 8. மேலதிக தெளிவுபடுத்தல்கள்

மேலதிக விபரங்களை 2023 செப்டெம்பர் 19ஆம் திகதி முதல் 2023 ஒடோபர் 02ஆம் திகதி வரையில் பெறுகை நிபுணர் - 011 2452432 அல்லது செயற்றிட்டப் பணிப்பாளர் 011 231449797 தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். மின்னஞ்சல்: **ldspmpclg2018@gmail.com**

**தலைவர்**
**அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழு,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,**
**இலக்கம் 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.**
19.09.2023

දශක ගණනාවක් පුරා ලුහුඬු දැන්වීම්කරුවන්ගේ විශ්වාසය දිනූ වෙළඳපොළ

ලුහුඬු දැන්වීම්

පල දරන්න - පළ කරන්න

පියුමි - 011 2 429 383 / 011 2 429 347 /
ගයනි - 011 2 429 342 011 2 429 343

# பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## புளொக் கற்களை வழங்குதல் (Interlock Paving Blocks)

விலைமனு இல. **PRDA/WP/PRO/2023/75**

இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | விலைக்கோரல் பிணை முறி (ரொக்கப் பணமாக) | விலைக்கோரல் பிணை முறி (வங்கி / காப்புறுதி நிறுவனம்) |
|---|---|---|---|
| 01 | 99631 புளொக் கற்களை வழங்குதல் (220x110x80mm thick non Rectangular natural coloured precast interlocking paving blocks of $25N/mm^2$ Compressive Strength) | 40,000.00 | 80,000.00 |

02. மேற்கூறப்பட்ட உருப்படிகளுக்கு இயைபான விபரமான தகவல்கள் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ளன.

03. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.09.19ஆம் திகதியிலிருந்து 2023.10.03ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 1,178.75 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேற்கூறப்பட்ட பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-10-04ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

Funded by The European Union

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**கமத்தொழில் அமைச்சு**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## பதுளை மாவட்டத்தில் வக்கடஹின்ன-பாதினாவெல வீதியின் புதுப்பித்தலின் 2 ஆம் கட்ட நிர்மாணம்

## Contract No.: LK-MOA-PMU-353385-CW-RFB

01. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக 58.630 மில்லியன் அஜடொ இற்கு நிகரானதொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து(IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பின்வரும் வேலைகளுக்காக இந்த ஒப்பந்தத்தின் கீழ் தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பின்வரும் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் சார்பாக மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகு செலவு (மில். ரூபாவில்) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவைப் படும் தரம் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | விலைமனுப் பிணை செல்லுபடியாகும் காலப் பகுதி | வைப்பிலிடப் படும் மீளளிக்கப் படாத ரொக்கப் பணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|---|
| LK/MOA-PMU-353385-CW-RFB | பதுளை மாவட்டத்தில் வக்கடஹின்ன-பாதினாவெல வீதியின் புதுப்பித்தலின் 2 ஆம் கட்ட நிர்மாணம் | 66.6 | 6 மாதங்கள் | நெடுஞ் சாலைகள் நிர்மாணத்தில் சி-4 அல்லது மேற்பட்டது | 800,000.00 | 2024 மார்ச் 8 ஆம் திகதியன்று வரையும் | 15,000.00 |

03. விலைமனுதாரர் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு விலைமனுப்பிணையொன்றுடனும் மேலேயுள்ளவாறான செல்லுபடியாகும் காலப்பகுதிக்குமாக விலைமனுக்கோரலை சமர்ப்பிப்பதற்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் ஒரு விலைமனுவை மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரரொருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரத்திற்காக பொருத்தமான நிர்மாணத் துறையில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசியபோட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடத்தப்படும்.

05. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5 ஆம் பிரிவில்) வழங்கப்பட்டுள்ளன.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 0112073044/0714881265/0714961603. தொலைநகல் இல.: 0112877546) (மின்னஞ்சல்: procurementspasmp@hotmail.com) அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

07. பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2 ஆம் இலக்கத்தின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட கண்காணித்தல் பணிமனையில் 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக்கூட்டம் நடைபெறும்.

08. விலைமனுக்கள் 2024 பெப்ரவரி 9 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

09. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. 2023 செப்டெம்பர் 20 ஆம் திகதியன்றிலிருந்து 2023 ஒக்ரோபர் 13 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2 ஆம் இலக்கத்திலுள்ள விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட கண்காணித்தல் பணிமனைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

11. கீழே வழங்கப்பட்டவாறு விலைமனுக்களின் மூடும் திகதியானது 2023 ஒக்ரோபர் 13 ஆம் திகதியாகும்.

12. மேலேயுள்ளவாறு விலைமனுக்களை மூடும் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, 123/2 ஆம் இலக்கத்திலுள்ள விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட கண்காணித்தல் பணிமனையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனுதாரர்களின் ஒரு பிரதிநிதி மாத்திரம் என்ற அடிப்படையில் சமுகமளித்திருக்கும் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

13. பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் ஆகியன தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**
**திகதி: 2023 செப்டெம்பர் 19 ஆம் திகதியன்று.**

### சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சகம்

# போதனா வைத்தியசாலை – பேராதனை கொள்முதல் அறிவிப்பு

## மருத்துவ உபகரணங்கள் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் – 2023

போதனா வைத்தியசாலை - பேராதனை பிராந்திய கொள்முதல் குழு - 2023 செப்டம்பர் 19 முதல் 2023 அக்டோபர் 10ம் திகதி மதியம் 2.30 மணிவரை பின்வரும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்கான ஏலங்களை அழைக்கிறது.

| | மருத்துவ உபகரணங்கள் | அளவு |
|---|---|---|
| 01 | C-Arm | 01 |
| 02 | Diathermy Machine | 04 |
| 03 | Automated Coagulator | 01 |
| 04 | Electrophoresis Analyzer | 01 |

மேலதிக தகவல்களை போதனா வைத்தியசாலை - பேராதனை அதிகாரபூர்வ வலைத்தளமான www.peradeniya-hospital.health.lk இருந்து பெறலாம்.

2023 செப்டம்பர் 27ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு பேராதனை போதனா வைத்தியசாலையில் கொள்முதல் முன்கூட்டத்தில் நடைபெறவுள்ளது

**எச்.எம்.ஏ.திலகரத்ன,**
**பணிப்பாளர்**
**போதனா வைத்தியசாலை**
**பேராதனை**

### பெயர் மாற்றம்

இலக்கம் 489B, மௌலான வீதி, சாய்ந்தமருது - 14 ஐச் சேர்ந்த (947814435V) ஞான சேகரம் ருஷாந்தினி (947814435V அடையாள அட்டை இலக்கம்) ஆகிய நான் 05-09-2023 முதல் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை "ஞானசேகரம் பாத்திமா றுஷாதா" என மாற்றி உள்ளேன் என்பதை இத்தால் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**ஞானசேகரம் பாத்திமா றுஷாதா**

Repeat Your Ad For Better Offers

# பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## மீகொட ஆயுர்வேத மூலிகைத் தோட்ட வதிவிட நோயாளர்களின் 05 தங்குமிட அலகுகளின் கூரைக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல்

### விலைமனு இல. PRDA/WP/PRO/2023/74

இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | விலைக்கோரல் பிணை முறி (ரொக்கப் பணமாக) | விலைக்கோரல் பிணை முறி (வங்கி / காப்புறுதி நிறுவனம்) |
|---|---|---|---|
| 01 | தேவையான பொருட்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அளவுகள் என்பன விலைமனு ஆவணத் தொகுதியில் தரப்பட்டுள்ளன. | 12,500.00 | 25,000.00 |

02. மேற்கூறப்பட்ட உருப்படிகளுக்கு இயைபான விபரமான தகவல்கள் கேள்விப் படிவத்தில் தரப்பட்டுள்ளன.

03. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.09.19ஆம் திகதியிலிருந்து 2023.10.03ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 1,178.75 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேற்கூறப்பட்ட பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-10-04ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

# கேள்விகளுக்கான அழைப்பு

**(இலங்கை அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்படும் செயற்றிட்டம்)**

## விவசாயத் திணைக்களம் – பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளுக்காக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சீடா (CIDA) பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2023-09-19ஆம் திகதி முதல் 2023-10-09ஆம் திகதி வரை பி.ப. 2.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் இந்தத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திலிருந்து கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-10-10ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது பதிவுத் தபாலின் மூலம் அனுப்பியோ கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

குறித்த வேலைகள் தொடர்பில் மேலும் தகவல்கள் தேவைப்படின் விவசாய திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு விசாரித்தறிந்துகொள்ளலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

| கேள்வி இல. | கொள்வனவு செய்யும் பொருள் / சேவை | ICTAD / CIDA பதிவு | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | கேள்விப் பிணை: பணமாகச் செலுத்துவ தானால் (ரூபா சதம்) | கேள்விப் பிணை: வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்ப தானால் (ரூபா சதம்) |
|---|---|---|---|---|---|
| விரி/ப/ 06/02/2023-124 | பேராதனை ஹெல போஜுன்ஹலவைச் சுற்றி மறைப்பு வேலியை நிர்மாணித்தல் (ரூபா **3,833,940.00**) | C-7 C-8 C-9 | 2,500.00 | 38,250.00 | 76,500.00 |
| விரி/ப/ 06/02/2023-135 | கன்னொருவ சேவை தொகுப்பு பயிற்சி நிறுவனத்தில் சாரதி ஓய்வு அறை மற்றும் பொழுதுபோக்கு இல்லத்தின் திருத்தவேலைகள் (ரூபா **3,423,416.90**) | C-7 C-8 C-9 | 2,500.00 | 34,225.00 | 68,450.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**

**தொலைபேசி இலக்கம்: 081-2389127**
**தொலைநகல்: 081-2387403**

# பெறுகை அறிவித்தல்!

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## பன்னல/ வகவத்த எஸ்போல்ட் உற்பத்தியகத்தில் காபட் போக்குவரத்திற்காக 03 கியூப் மற்றும் 05 கியூப் ஏற்றும் கொள்ளளவு உடைய டிப்பர் வண்டியை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பன்னல/வகவத்த உற்பத்தியகங்களில் காபட் போக்குவரத்திற்காக 03 கியூப் மற்றும் 05 கியூப் ஏற்றும் கொள்ளளவுடைய டிப்பர் வண்டியை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | வழங்குநர்களிடம் உள்ள குறைந்த பட்ச வாகனங்கள் | கேள்விப் படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்வி பிணையின் பெறுமதி: காசாக |
|---|---|---|---|---|
| PRDA/WP/ PRO/2023/77 | பன்னல உற்பத்தியகங்களில் காபட் போக்குவரத்திற்காக 03 கியூப் மற்றும் 05 கியூப் ஏற்றும் கொள்ளளவுடைய டிப்பரை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் | 10 | ரூ. 2000.00 + Vat | ரூ. 20,000.00 |
| PRDA/WP/ PRO/2023/78 | வகவத்த உற்பத்தியகத்தில் காபட் போக்குவரத்திற்காக 03 மற்றும் 05 கியூப் ஏற்றும் கொள்ளளவுடைய டிப்பர் வண்டியை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் | 10 | ரூ. 2000.00 + Vat | ரூ. 20,000.00 |

02. இதற்காக கேள்வி ஆவணத் தொகுதியை 2023.09.19 முதல் 2023.10.04 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக்கட்டணத்தைச் செலுத்தி இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக அல்லது வங்கிப் பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிப்நதனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023.10.05 பி.ப. 2.30 இற்கு முடிவடைவதுடன் கேள்விகள் திறத்தல் அன்றைய தினம் மேற்படி நேரத்திலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி, அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. பே. இலக்கம்: 011-4849825/45**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/06/PT/6513(MP) | Trolley Rail Mounting Accessories of the ZPMC 41T STS Cranes at JCT | 57,000.00 | 1000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6500(MP) | Main Trolley Wire Ropes of 25MM X 457M & 25MM X311M | 120,000.00 | 3500.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6504(MP) | 04 Nos. Main Hoist Wire Rope for Mitsui 35.5 T STS Cranes | 72,000.00 | 1,000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6517(EL) | 01 No. 12KVA Rated Incoming and Outgoing Switchgear Panel | 60,000.00 | 1,000.00 | 2023.10.17 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6509(EL) | 10 Nos. Pulse Generators for ZPMC Yard Cranes at JCT | 50,000.00 | 1,000.00 | 2023.10.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6515(MP) | 08 Nos. Complete Trolley Wheels Assy (Drive & Driven) of the RMT Cranes (IHI) | 44,000.00 | 1,000.00 | 2023.10.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/PT/21/011 | Hardware Items | 19,000.00 | 1,000.00 | 2023.10.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/21/010 | Steel materials & Accessories | 24,000.00 | 1,000.00 | 2023.10.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/22/012 | Steel materials & Accessories for the extension of the existing workers' Rest Room as part of the Refurbishment Project for the GCMU(M) – JCT Workshop | 22,000.00 | 1,000.00 | 2023.10.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/10/030 | MS Thread Bar & G.I. Pipe | 90,000.00 | 1,000.00 | 2023.10.11ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/14/021 | 01 No. Printer A3 colour with Scanner | 30,000.00 | 1,000.00 | 2023.10.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/11/051 | Alfa Laval Heat Exchanger (Center Cooler) of M/T Barana II | 40,000.00 | 1,000.00 | 2023.10.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/14/061 | 100000 Nos. Inter-locking blocks 100MM thick | 171,000.00 | 3,500.00 | 2023.10.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/54 | 7560 liters Gear Oil Lanka MP90 | 127,500.00 | 3,500.00 | 2023.10.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/053 | 30240L Hydro Oil 68 Lanka | 181,000.00 | 3,500.00 | 2023.10.12 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/060 | 6480 KGS of Grease MP-2 | 144,000.00 | 3,500.00 | 2023.10.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொதுஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. **2023 செப்டம்பர் 19 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள** மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம் பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராகக கீழேயுள்ளமுகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# தென்னிந்திய பேராசிரியர் அபூதாஹிர் (பாகவி) இலங்கை விஜயம்



பேருவளை விசேட நிருபர்

ரபியுனில் அவ்வல் மாதத்தில் சீனன்கோட்டையில் நடைபெறும் மீலாதுன் நபிவிழா மற்றும் மௌலித் மஜ்லிஸ்களில் விசேட பேச்சாளராக கலந்துகொள்ள இந்தியாசேலம் நூருல் இஸ்லாம் அரபுக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அப்ழலுல் உலமா மௌலவி அல் ஹாஜ் அபூதாஹிர் (பாகவி) சீனன் கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இன்று 19 ஆம் திகதி செவ்வாய்கிழமை மாலை சீனன் கோட்டை குட்டிமலை ஜலாலிய்யா ஸாவியா மஸ்ஜிதில் மௌலவிகள் எம். டப்ளியு.எம் பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி), முஹம்மத் இக்ராம் (நுலாரி) ஆகியோர் தலைமையில் நடைபெறும் ஸூப்ஹானமௌலித் மஜ்லிஸ் நிகழ்வில் அவர் உரையாற்றுவார்.

நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறும் மீலாத் விழாக்களிலும் அவர் உரை நிகழ்த்தவுள்ளார். இவர் இப்பிரதேசத்திலுள்ள பல முக்கிய பிரமுகர்கள், அறிஞர்களையும் சந்திக்கவுள்ளார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.09.17
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5240 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,864,432.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 8 4 9 8 4 3

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3482 — சீட்டிழுப்பு திகதி 2023.09.17 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,929,159.60
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 01 48 71 78 — விசேட எழுத்து M — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 04334

**லக்கி 7** — திகதி 17.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0066
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 1 0 0 0 4 1 — L7 இலக்கம் 0 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,931,872.48


**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1588 — 17/09/2023 — 14478 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,087,536.00
ஆங்கில எழுத்து R — சுப்பர் இலக்கம் 21 — வெற்றி இலக்கங்கள் 03 13 50 73
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — தேதி 2023/09/17 — சீட்டிழுப்பு இலக்கம் 1270 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,560,426.40
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 32 33 49 72 — விஷேசட ஆங்கில எழுத்து A
Double Chance இலக்கம் 03775

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 549 — சீட்டிழுப்பு திகதி 2023-09-17 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 10 24 41 47 — விசேட இலக்கினம் கும்பம்



## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்




118
ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

325-2876 TOYOTA 1982, VAN அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 059064



106
கார்கள் விற்பனைக்கு

HM-1231 AUDI 2003, CAR அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714542958. 059055



122
மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

ABP-0960 BAJAJ 2017, QL-7912 BAJAJ 2007, YS-5075 BAJAJ 2011, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711210810. 059072

YA-1305 BAJAJ 2010, YC-7582 BAJAJ 2010, THREE WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0705999163. 059077

Repeat Your Ad For Better Offers


## வெல்லவத்த வை எம் பீ ஏ ஸொஸயிட்டியை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மதுர விதானகே ஆகிய நான் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் **'வெல்லவத்த வை எம் பீ ஏ ஸொஸயிட்டியை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'** எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

அ) புத்த தர்மத்தை நிலைநாட்டுதல், அதன் போதனை மற்றும் வளர்ச்சிக்காக வசதிகளை ஏற்பாடு செய்தல்

ஆ) புத்த தர்மத்தை பின்பற்ற ஊக்கமூட்டுதல் மற்றும்

இ) பௌத்த மக்கள் மத்தியில் ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்தல்

பிறவும்.

**மதுர விதானகே**
**பாராளுமன்ற உறுப்பினர்.**

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 397) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.07.11ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. காலி பிரசித்த நொத்தாரிசு டி.கே.அபேநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2016.05.05ஆம் திகதியிட்ட 75ஆம் இலக்க ஈட்டு முறி, காலி பிரசித்த நொத்தாரிசு ஐ.டி.கமகே அத்தாட்சிப்படுத்திய 2015.02.25ஆம் திகதியிட்ட 342ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2014.05.06ஆம் திகதியிட்ட 252ஆம் இலக்க ஈட்டு முறி, காலி பிரசித்த நொத்தாரிசு கே.ஏ.ஜி. புஞ்சிஹேவா அத்தாட்சிப்படுத்திய 2010.12.03ஆம் திகதியிட்ட 22ஆம் இலக்க ஈட்டு முறி, காலி பிரசித்த நொத்தாரிசு என்.பி.ஜி.சந்திரிகா அத்தாட்சிப்படுத்திய 2010.05.19ஆம் திகதியிட்ட 2298ஆம் இலக்க ஈட்டு முறி ஆகியவற்றின் பேரில் கனன்கே, கடைத்தெரு, நலவன எனும் முகவரியில் அமைந்துள்ள நலவன அரிசி ஆலை உரிமையாளரான திரு.லியன பத்திரனகே சந்தன குமார தேசப்பிரிய என்பவர் பெற்றுக்காண்ட கடன் வசதி மீது 2023.04.26ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 9,974,645.61 ரூபாயும் (ஒன்பது மில்லியன் தொண்ணூற்று எழுபத்து நான்காயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து ரூபாய் அறுபத்தொரு சதம்) அத்துடன் 2023.04.27ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையில் 6,242,988.02 ரூபாய் (ஆறு மில்லியன் இருநூற்று நாற்பத்திரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தெட்டு ரூபாய் இரண்டு சதம்) மீது ஆண்டுக்கு இருபத்தேழு தசம் இரண்டு ஐந்து (27.25%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. காலி பிரசித்த நொத்தாரிசு டி.கே. அபேநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2016.05.05ஆம் திகதியிட்ட 75ஆம் இலக்க ஈட்டு முறி, காலி பிரசித்த நொத்தாரிசு ஐ.டி.கமகே அத்தாட்சிப்படுத்திய 2015.02.25ஆம் திகதியிட்ட 342ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2014.05.06ஆம் திகதியிட்ட 252ஆம் இலக்க ஈட்டு முறி, காலி பிரசித்த நொத்தாரிசு கே.ஏ.ஜி.புஞ்சிஹேவா அத்தாட்சிப்படுத்திய 2010.12.03ஆம் திகதியிட்ட 22ஆம் இலக்க ஈட்டு முறி, காலி பிரசித்த நொத்தாரிசு என்.பி.ஜி.சந்திரிகா அத்தாட்சிப்படுத்திய 2010.05.19ஆம் திகதியிட்ட 2298ஆம் இலக்க ஈட்டு முறி ஆகியவற்றின் பேரில் நிலுவையாகவுள்ள 9,974,645.61 ரூபாயையும் (ஒன்பது மில்லியன் தொண்ணூற்று எழுபத்து நான்காயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து ரூபாய் அறுபத்தொரு சதம்) அத்துடன் 2023.04.27ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையில் மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர் டி அன்ட் எச் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கேற்ப இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி இமதுவ கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**முதலாவது அட்டவணையானது**

தம்மத்தலா வத்த என அறியப்படும் டான் அத்தேவெல வத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.எல். கலப்பத்தி தயாரித்த 1977.01.21ஆம் திகதியிட்ட 630ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள துண்டு 04 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணியானது தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோரளை, வெலிகம பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, வெலிகம பிரதேச சபை எல்லைகளுள், 372/B கிராம அலுவலர் பிரிவில், பொறம்பா கனன்கே என்ற இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு 04 வடக்கில் பத்தாவினையும் கிழக்கில் காணித்துண்டு 05ஐயும் கமகேவத்தவினையும் தெற்கில் கனன்கேவிலிருந்து வெலிகம வரையான நெடுஞ்சாலையையும் மேற்கில் காணித்துண்டு 06ஐயும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு ரூட்ஸ் மற்றும் பத்து தசம் ஒன்பது ஏழு பேர்ச்சுகள் (ஏ.0-ஆர்2-பே. 10.97) பரப்பளவுடன் அக்காணியிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி N45/107 எனும் இலக்கத்தின் கீழ் மாத்தறை காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

**குறித்த காணித்துண்டு 04ஆனது உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். சமரசிங்ஹ தயாரித்த 2004.02.01 ஆம் திகதியிட்ட 2019 ஆம் இலக்க அண்மைய நில அளவையின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.**

தம்மத்தலா வத்த என அறியப்படும் டான் அத்தேவெல வத்த என்ற காணியின் துண்டு 04 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான மேற்குறிப்பிட்டவாறு பொறம்பா கனன்கே என்ற இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு 04 வடக்கில் பத்தாவினையும் கிழக்கில் காணித்துண்டு 05ஐயும் கமகேவத்தவினையும் தெற்கில் கனன்கேவிலிருந்து வெலிகம வரையான நெடுஞ்சாலையையும் மேற்கில் காணித்துண்டு 06ஐயும் எல்லைகளாகக் கொண்டு 2091ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு ரூட்ஸ் மற்றும் எட்டு தசம் பூச்சியம் ஆறு பேர்ச்சுகள் (ஏ.0-ஆர்2-பே.8.06) பரப்பளவுடன் அக்காணியிலுள்ள மரங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பளர் சபையின் கட்டளைப்படி

**திருமதி. டபிள்யு.ஏ.என். ஹேமாமாலினி**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**இமதுவ கிளை**
**08.08.2023**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட மேம்பாட்டு பிரிவு**

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

LSC

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### கரும்பு போன்குவரத்துக்காக கொள்கலனுடனான 05 எண்ணிக்கையிலான இழுவண்டிகளை வழங்குவதற்கான தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கோரல் (PR 7464)

கரும்பு போன்குவரத்துக்காக கொள்கலனுடனான 05 எண்ணிக்கையிலான இழுவண்டிகளை வழங்குவதற்கான வழங்களுக்கான ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக **LKR 8,000.00** பணமாக செலுத்தி 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதி வரை வேலை நாட்களில் நேரப்படி 09.00 மணி முதல் 15.00 மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும்.
2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி 14.00 மணி தாமதிக்காது **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"கரும்பு போன்குவரத்துக்காக கொள்கலனுடனான 05 எண்ணிக்கையிலான இழுவண்டிகளை வழங்குவதற்கான கேள்விமனு"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து மனுக்களுக்கும் **"மனுப்பாதுகாப்பு" ரூ.375,000.00 (முன்னூற்று எழுபத்தைந்து ஆயிரம் ரூபாய்)** இணைத்திருத்தல் வேண்டும் மேலும் விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 11 2584184,** கைத்தொலைபேசி : **+94 77 010 3359,** தொலைநகல் : **+94 11 2500674,** (மின்னஞ்சல்: **sapumal@lscl.lk**).

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,
கொழும்பு 04.

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

1. **கடன் தொடர்பு இலக்கம் : 84166069**

   **இல. 51/3, பிட்டியகெதர, பெம்முல்ல என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ஹீனட்டிகல கமே கங்காணமலாகே சுட்றிகு ரொஷாந்த உதயகுமாரவின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை**

2. இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.07.28ஆம் திகதிய 2343ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.08.03ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமையளள முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நில மனையையும் இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 26.10.2023 ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**"மீரியகஹமுல்லேவகலஹேன"** என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர்.எம்.ஏ. பண்டார தயாரித்த 2017.07.25ஆம் திகதிய 2239ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி **மத்திய** மாகாணம், **நுவரெலியா (முன்னர் கண்டி)** மாவட்டம். **உடபுலத்கம அம்பகமுவ** கோரளை **அம்பகமுவ** நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 316 புலத்கம கிராம சேவகர் பிரிவிலுள்ள பாடுபொல எனும் இடத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 25.5.6 என்பவற்றையும் **கிழக்கில்** 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல.2, 5, 8 என்பவற்றையும் **தெற்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல.13, உல்பத் ஓயா என்பவற்றையும் **மேற்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 6. உல்பத் ஓயா என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 2239ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் **மூன்று ஏக்கர்கள் ஒரு ரூட் பதினைந்து தசம் ஏழு பேர்ச்சுகள் (ஏ3-ரூ1-பே15.7)** அல்லது **1.35500** ஹெக்ரயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

**"மீரியகஹமுல்லேவகலஹேன"** என அழைக்கப்படும் காணியின் 2239ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி **மத்திய** மாகாணம், **நுவரெலியா (முன்னர் கண்டி)** மாவட்டம், **உடபுலத்கம அம்பகமுவ** கோரளை **அம்பகமுவ** நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட **இல. 316 புலத்கம** கிராம சேவகர் பிரிவிலுள்ள **பாடுபொல** எனும் இடத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 5 TP.359308இல் விபரிக்கப்பட்டுள்ள காணியையும் **கிழக்கில்** TP.359308இல் விபரிக்கப்பட்டுள்ள காணியையும் **தெற்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல.13, 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 8 என்பவற்றையும் **மேற்கில்** 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 8ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 2239ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் அதே வரைபடத்தில் காணித்துண்டு இல. 2, 5, 8 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதை ஒதுக்கத்தைப் பயன்படுத்தும் உரிமையுடனும் **இருபத்தெட்டு தசம் ஆறு பேர்ச்சுகள் (ஏ0-ரூ0- பே28.6)** அல்லது **0.07227** ஹெக்ரயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட காணித்துண்டு இல.1, 7 மற்றும். காணித்துண்டு இல. 2, 5, 8 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதை ஒதுக்கம் என்பன கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியிலிருந்து பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான பாகங்களாகும்.

**"மீரியகஹமுல்லேவகலஹேன"** இப்போது வத்த என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு **மத்திய** மாகாணம், **நுவரெலியா (முன்னர் கண்டி)** மாவட்டம், உடபுலத்கம அம்பகமுவ கோரளை யட்டிஹன்ஹுலஹு பாடுபொல பகுதி அம்பகமுவ நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 316 புலத்கம கிராம சேவகர் பிரிவிலுள்ள பாடுபொல எனும் இடத்தில் அமைந்துள்ளதோடு **வடக்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 25ஐயும் **கிழக்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல.04, TP.359308 6 என்பவற்றையும் **தெற்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 13, உல்பத் ஓயா என்பவற்றையும் **மேற்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 5, 6 மற்றும் உல்பத் ஓயா என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 2239ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் வளரும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதன்கண் காணப்படும் அனைத்துடனும் **மூன்று ஏக்கர்கள் மூன்று ரூட்கள் ஏழு பேர்ச்சுகள் (ஏ3-ரூ3-பே07)** பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி **கம்பளைக்** காணிப் பதிவகத்தில் B/11/161இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில **அளவையாளர் ஆர். எம்.ஏ. பண்டார** தயாரித்த **2017.07.25** என்ற திகதியிட்ட **2239** என்ற இலக்கத்தைக் கொண்ட அண்மைய வரைபடத்தில் கீழ்க்காணுமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

**"மீரியகஹமுல்லேவகலஹேன"** என அழைக்கப்படும் காணியின் 2239ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1-8 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறிப்பிடப்பட்டவாறு பாடுபொல எனும் இடத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 25, 5, 6 என்பவற்றையும் **கிழக்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 4ஐயும் **தெற்கில்** 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 13ஐயும் **மேற்கில்** உல்பத் ஓயாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் **மூன்று ஏக்கர்கள் மூன்று ரூட்கள் ஏழு பேர்ச்சுகள் (ஏ3-ரூ3-பே07)** அல்லது **01.53528** ஹெக்ரயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

**ஏலவிலை கூறுவோர் மேற்குறித்த ஆதனத்தின் உரிமைத்துவ உறுதியையும் அதனோடு இணைந்த ஆவணங்களையும் இலங்கை வங்கி மீரிகம மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருடன் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிடலாம்.**

**தொடர்புகளுக்கு - 0332275975**

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**திருமதி கே.பி.கே.ரி.என். அமரசேன**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மீரிகம மேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# தசுன் ரசிகர்களிடம் மன்னிப்பு




ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் 10 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்தது தொடர்பில் இலங்கை அணித் தலைவர் தசுன் சானக்க ரசிகர்களிடம் மன்னிப்புக் கோட்டுக்கொண்டார்.

ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓட்டங்களுக்கு சுருண்ட நிலையில் இந்திய அணி 6.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை எட்டியது.

போட்டிக்குப் பின்னர் பேசிய தசுன் சானக்க கூறியதாவது,

“சிராஜ் அபார பந்துவீச்சை வெளிப்படுத்தினார். துடுப்பாட்டத்திற்கு சிறந்த ஆடுகளம் என்று நான் நினைத்தபோதும் மழையுடனான காலநிலை ஆட்டத்தில் முக்கிய பங்கு வகித்தது. இது எமக்கு கடினமான நாளாக இருந்தது.

நாம் சற்று கவனத்துடன் ஆடி ஸ்திர நிலையை அடைந்த பின்னர் வேகமாக ஆடித்தாடி இருந்திருக்கலாம்.

(ஆசிய கிண்ணத்தில்) அதிக சாதகமான நிலைகள் இருந்தன. சுழற்பந்துக்கு சதீர மற்றும் குசல் ஆடிய முறை, அதேபோன்று அசலங்கவின் துடுப்பாட்டம். இந்த மூவரும் இந்தியாவில் துடுப்பாட்டத்திற்கு சாதகமான ஆடுகளங்களில் அதிக ஓட்டங்களை குவிப்பார்கள். கடுமையான நிலைமைகளில் இருந்து மீண்டு வருவது எப்படி என்பது எமக்குத் தெரியும். நல்ல அணிகளை வீழ்த்தி நாம் இறுதிப் போட்டிக்கு வந்தது, சாதகமான சமிக்ஞை ஒன்றாகும்.

கடந்த சில ஆண்டுகளாக வீரர்கள் சிறந்த முறையில் ஆடி வருகிறார்கள். இங்கு பெரும் எண்ணிக்கையில் வந்த ரசிகர்களுக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன். நாம் உங்களை ஏமாற்றியதற்காக மன்னிப்புக் கேட்கிறேன்” என்றார்.

## விழித்தெழுவதற்கான தருணமாக இருக்கும்



ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணியின் மோசமான தோல்வி விழித்தொழுவதற்காக தருணமாக இருக்கும் என்று இலங்கை அணியின் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் தெரிவித்துள்ளார்.

“சில நேரம் இது விழித்தொழுவதற்கான தருணமாக இருக்கக் கூடும். நாம் இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகளுடன் விளையாடுவதற்கு எமது ஆட்டத்தை உச்சத்தில் வைத்திருக்க வேண்டும். உலகக் கிண்ணத்திற்கு செல்லும்போது எம்மை ஊக்கப்படுத்துவதற்கு இதனை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியும்” என்று சில்வர்வுட் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துக்கூறிய அவர், “உண்மையில் இது ஒரு மோசமான தினம். நாம் உயர் தரமான பந்துவீச்சுக்கு முகம்கொடுத்தோம். நாம் நிறைவு செய்த விதம் வெட்ககரமானது. என்றாலும் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது” என்றார்.

## பாலமுனை அறபா வெற்றி



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

பாலமுனை மெறூன்ஸ் விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்த மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் ஞாபகார்த்த ‘பாலமுனை சம்பியன்’ மென்பந்து மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பாலமுனை அறபா விளையாட்டுக் கழக அணி கிண்ணத்தை வென்றது. பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (16) கழகத்தின் தலைவர் அபூசாலி தலைமையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் எஸ். எம். சபீஸ் எனப் பலரும் கலந்து கொண்டார். இறுதிப் போட்டியில் அறபா அணியினர் நிர்ணயித்த 60 ஓட்ட வெற்றி இலக்கை பாலமுனை மஹாசீர் விளையாட்டுக் கழக அணியினர் பெறத் தவறினர்.

## மலேசியாவில் தங்கம் வென்றார் ஹுமாயூன்

**புத்தளம் தினகரன் நிருபர்**



மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற 35 ஆவது ஆசிய மாஸ்டர்ஸ் மெய்வல்லுனர் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் உடற்கல்வி போதனாசிரியர் எம்.எப்.எம். ஹுமாயூன், உயரம் பாய்தல் போட்டியில் தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார். இதேவேளை சாஹிராவின் உடற்கல்வி போதனாசிரியர் எம்.எப்.எம். துபைல் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார். அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மாஸ்டர் மெய்வல்லுனர் போட்டியில் இந்த இரு சகோதரர்களும் வெற்றியீட்டியே கோலாலம்பூரில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபெற தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## எச்.ஆர்.ஏ. மென்ஸ் கிண்ணம் றஹீமிய்யா அணி வசமானது



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று எச்.ஆர்.ஏ. நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற எச்.ஆர்.ஏ. மென்ஸ் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா விளையாட்டு கழகம் சம்பியனானது. இதில் 32 விளையாட்டு கழகங்கள் பங்கு கொண்டன. அக்கரைப்பற்று, பள்ளிக்குடியிருப்பு அதாஉல்லா விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (15) நடைபெற்ற இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணியை றஹீமிய்யா அணி 13 ஓட்டங்களால் வீழ்த்தியது. இதில் றஹீமிய்யா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 64 ஓட்டங்களை பெற்றநிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹிஜ்ரா அணி 51 ஓட்டங்களை மாத்திரமே குவித்தது. தொடர் நாயகனாக றஹீமிய்யா அணியின் ஹஸ்லி அஹமட் தெரிவு செய்யப்பட்டார்.

## ஆசிய கிண்ணம்:

# இலங்கை மைதான ஊழியர்களுக்கு ஒன்றரைக் கோடி ஊக்கத் தொகை



ஆசிய கிண்ணத் தொடரை மழைக்கு மத்தியில் தடங்கல் இன்றி நடத்த உதவிய மைதான ஊழியர்களுக்கு போட்டி ஏற்பாட்டாளர்கள் 50,000 அமெரிக்கா டொலர்களான இலங்கை நாணய மதிப்பில் ஒன்றரை கோடிக்கு மேற்பட்ட ஊக்கத் தொகையை அளித்துள்ளனர்.

ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை வென்ற இந்திய வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் சிராஜும் அந்த விருதுக்காக கிடைத்த 5,000 டொலர் பரிசுத் தொகையையும் மைதான ஊழியர்களுக்கு வழங்கியுள்ளார்.

இலங்கையில் மழையுடன் கூடிய கால நிலைக்கு மத்தியிலேயே கடந்த மூன்று வாரங்களாக ஆசிய கிண்ண போட்டிகளின் பெரும்பாலான ஆட்டங்கள் இலங்கையில் நடத்தப்பட்டன.

இதில் மழை குறுக்கிடும்போது சுமார 100 பேர் அளவான மைதான ஊழியர்கள் மைதானத்தை மூடுவது மற்றும் மழையால் ஏற்படும் பாதிப்பை குறைப்பதில் விரைந்து செயற்பட்டது போட்டிகளில் ஆடும் அணிகள், ரசிகர்கள் மற்றும் வர்ணனையாளர்களின் பாராட்டை பெற்றது.

“கிரிக்கெட்டின் மறைமுகமான நாயகர்களுக்கு பாராட்டுகள்” என்று ஆசிய கிரிக்கெட் கௌன்சில் தலைவர் ஜெய் ஷா கடந்த ஞாயிறன்று ட்விட்டரில் தெரிவித்தார். அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பையும் பாராட்டினார்.

மைதான ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஊக்கத் தொகை கொழும்பு மற்றும் கண்டி மைதான ஊழிர்களுக்கு இடையே பகிரப்படும் என்று ஜெய் ஷா தெரிவித்தார்.

இந்தப் பணம் குறிப்பிடத்தக்க ஊழியர்களிடையே பகிரப்படுகின்றபோதும் அந்தத் தொகை கணிசமானதாக அமையவுள்ளது. இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதான மைதான தயாரிப்பு அதிகாரி கொட்பி தாபரேரா இந்த ஊக்கத் தொகையை ஜெய் ஷாவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்.

# பாலியல் குற்றச்சாட்டு: சட்டவிரோதமாக செயற்படவில்லையென குணதிலக்க நீதிமன்றத்திடம் தெரிவிப்பு



சிட்னி பெண்ணுடன் பாலியல் உறவில் ஈடுபட்டது தொடர்பில் சட்டவிரோத செயற்பாடுகள் எதிலும் தாம் ஈடுபடவில்லை என்று இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க நேற்று (18) நீதிமன்றத்தின் முன் தெரிவித்துள்ளார்.

சிட்னி நகரின் டவுனிங் சென்டர் மாட்ட நீதிமன்றத்தில் குணதிலக்க மீதான வழக்கு விசாரணை நேற்று ஆரம்பமானது. இதில் தனுஷ்க குணதிலக்க மற்றும் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பெண்ணும் தோன்றியுள்ளார்.

குணதிலக்கவுக்கு எதிராக ஆரம்பத்தில் நான்கு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டபோதும் அதில் 03 குற்றச்சாட்டுகள் தற்போது நீக்கப்பட்டுள்ளன. அந்தப் பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக பாலியல் உறவில் ஈடுபட்ட குற்றச்சாட்டு மாத்திரம் அவர் மீது தொடர்ந்து நீடிக்கிறது.

இதில் பாலியல் தாக்குதலுக்கு இலக்கானதாக கூறப்படும் பெண், தான் உயிருக்கு பயந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆணுறை அணியாமல் பாலியல் உறவில் ஈடுபடுவதற்கு தாம் ஏமாற்றப்பட்டதாக குறிப்பிட்டிருக்கும் அந்தப் பெண், அந்தத் தருணத்தில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சியதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு இறுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத்திற்காக இலங்கை அணியுடன் சென்றபோது குணதிலக்க மீது இந்த குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

நீதிபதி சாரா ஹுக்கட் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணைக்காக குணதிலக்க, அடையாளம் தெரியாத பெண் ஒருவருடனேயே வருகை தந்திருந்தார். அது அவரது புதிய காதலி என்று நம்பப்படுகிறது. இந்த வழக்கு விசாரணை நான்கு நாட்கள் நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டு தற்போது சிட்னி நகரில் சிக்கி இருக்கும் குணதிலக்க பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளார். சமூக ஊடகத்தை பயன்படுத்த ஆரம்பத்தில் அவருக்கு கட்டுப்பாடு இருந்தபோதும் அது தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# லிபிய வீதி விபத்தொன்றில் கிரேக்க மீட்பாளர்கள் பலி



லிபியாவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் கிரேக்க நாட்டு மீட்புக் குழுவைச் சேர்ந்த மூவம் மற்றும் லிபிய நாட்டு குடும்பம் ஒன்றைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர். லிபியாவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் டெர்னா நகருக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை (17) பயணித்துக் கொண்டிருந்த மீட்புக் குழுவினரை ஏற்றிய பஸ் வண்டி, குடும்பம் ஒன்று பயணித்துக் கொண்டிருந்த கார் வண்டி மீதே மோதியுள்ளது.

இதில் காரில் இருந்த மேலும் இருவர் மற்றும் பஸ்ஸில் இருந்த மேலும் எட்டுப் போர் படுகாயத்திற்கு உள்ளாகி இருப்பதாக லிபிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விபத்துக் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் மருத்துவப் பணியாளர்களை ஏற்றிய பஸ் வண்டியே விபத்துக்குள்ளானதாக கிரேக்க நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே பிரான்ஸ் மற்றும் இத்தாலி உட்பட பல நாடுகளைச் சேர்ந்த குழுக்களும் லிபியாவில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. டெர்னா நகருக்கு மேலால் அமைந்திருக்கும் இரு அணைகள் உடைபெடுத்து ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 11,300ஐ எட்டியுள்ளது. எனினும் 10 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் தொடர்ந்து காணாமல்போயுள்ளனர்.

# ஐ.நா பொதுச் சபை கூட்டம் ஆரம்பம்



140க்கும் அதிகமான உலகத் தலைவர்கள் மற்றும் அரச பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 78ஆவது ஐ.நா பொதுச் சபை கூட்டம் நியூயோர்க் நகரில் நேற்று (18) ஆரம்பமானது.

எதிர்வரும் 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் காலநிலை மாற்றம் மற்றும் உக்ரைனிய போர் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2030 ஆம் ஆண்டுக்காக மாற்றம் மற்றும் வேகமான செயற்பாடுகளுக்கான உலகத் தலைவர்களுக்கு வழிகாட்டலை வழங்கும் நோக்கில் பேண்தகு அபிவிருத்தி இலக்கை முன்வைத்து இம்முறை கூட்டம் நடைபெறுகிறது. இந்த நிகழ்வை ஒட்டி பல நாடுகளும் முக்கிய இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்த திட்டமிட்டுள்ளன.

இதில் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி நேரடியாக பங்கேற்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டு அவர் பொதுச் சபை கூட்டத்தில் வீடியோ திரை மூலம் தோன்றியே உரையாற்றி இருந்தார். அவர் வரும் வியாழக்கிழமை (21) வொஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனையும் சந்திக்கவுள்ளார்.

எனினும் வல்லரசு நாடுகளுக்கு இடையில் நிலவும் முறுகல்களுக்கு இந்த பொதுச் சபை கூட்டத்தில் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பொதுச் சபை கூட்ட அறையில் அமெரிக்கா மற்றும் சீனா இடையிலான போட்டி அதிகரித்து வருவதாக சுவிஸ் நாட்டு தூதுவர் பஸ்கவே பரிஸ்வில் குறிப்பிட்டுள்ளார். இந் நிலையில் இந்த கூட்டத்தில் நாடுகள் அரசியலில் இருந்து விலகி மனித உரிமை விவகாரத்தில் அவதானம் செலுத்தும்படி மனித உரிமை கண்காணிப்புக் குழு வலியுறுத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.